
# நான்

## உளவியல் சஞ்சிகை

"Naan"Psychological Magazine

நான் வளர்ந்தால் நாம் வளர்வோம்



மலர் 47 1975ம் ஆண்டிலிருந்து தை – பங்குனி, 2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான்" உளவியல் சஞ்சிகை"

இதழ்: தை - பங்குனி, 2022
தனிப் பிரதி: 100/=

**ஆசிரியர் :**
அ.சே. அமல்ராஜ் அ.ம.தி B.Ph, B.Th

**ஒருங்கிணைப்பு:**
அ. அருண்ராஜ் அ.ம.தி B.Ph

**விநியோகம்:**
அ. அருண்ராஜ் அ.ம.தி B.Ph
அ. காணிக்கைராஜ் அ.ம.தி B.Ph

**நிதி முகாமைத்துவம்:**
அ. றெஜினோல்ட் அ.ம.தி B.Ph

**ஆலோசனைக் குழு:**
அருட்கலாநிதி வின்சன் பற்றிக் அ.ம.தி Ph.D
Dr. சிவதாஸ் M.B.B.S., M.D.
கலாபூசணம் யோசப் பாலா
திருமதி. கோகிலா மகேந்திரன்
S. விஜேந்திரன் அ.ம.தி M.Sc (Coun)
டிலக்சினி சஞ்சீவன் M.Phil, B.Sc

**வெளியீடு:**
டி மசனெட் இறையியலகம்

**தொடர்பு:**
"நான்" உளவியல் சஞ்சிகை,
'வசந்தகம்', கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
+94 21 222 5339
+94 71 871 3039 (whatsup)
naanvasanthaham@gmail.com

## உள்ளே

"நான்" உளவியல் சஞ்சிகை

ஆசிரியரிடமிருந்து...

மனித மாண்பிற்கு ஊறு விளைவிக்கும் மனித நடத்தைக் கோலங்களில் மாற்றங்களை தோற்றுவித்தல்

மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்

எங்கே தோன்றுகின்றது மனிதமாண்பு?

மனிதம்

மனிதம் காட்டும் நண்பன்

"நான்" உளவியல் சஞ்சிகைக்கான நேர்காணல்

மாண்புறு மனிதம் மனிதம் மலர

மத வழிபாடும் மனித நேயமும்

இளமையின் இரகசியம்

மறைந்து போன மனித மாண்பு

மனித மாண்பு மாண்புற வேண்டும்

சிக்மண்ட் பிராய்ட்

தேயிலை வாழ்வு

நல்வாழ்விற்கு ஒரு நூல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான்" உளவியல் சஞ்சிகையானது...

எமது நாட்டில் தமிழ் மொழி மூலம் வெளிவரக்கூடிய ஒரே ஒரு உளவியல் சஞ்சிகையாக "நான்" உளவியல் சஞ்சிகை அமைந்துள்ளது.

இச்சஞ்சிகையானது இலங்கை அரசின் நூல் மற்றும் சஞ்சிகை வெளியீட்டு விதிகளுக்கு அமைவாக பதிவு செய்யப்பட்ட சஞ்சிகையாகும்.

யாழ் அமலமரித் தியாகிகள் சபையினதும், "டி மசனட்" இறையியலகத்தினதும் தலைமைத்துவத்தின் கீழ் இவ் உளவியல் சஞ்சிகையானது இயங்கி வருகின்றது.

இச்சஞ்சிகையானது 1975ம் ஆண்டு கண்டி அம்பிட்டிய அமல மரித்தியாகிகள் குருமடத்தில் அருட்கலாநிதி. வின்சன்ற் பற்றிக், அ.ம.தி அடிகளாரால் ஆரம்பிக்கப்பட்டு, இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கின்றது.

உளவியல் சார் அறிவு என்பது காலத்தின் மற்றொரு தேவையாகும். சமுகத்தின் உளவிருத்திக்கு பூரண பங்களிப்பு வழங்குவதே இதன் கடமைகளில் ஒன்றாகும். இச்சஞ்சிகையானது எமது நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் விநியோகிக்கப்படுகின்றது.

பண இலாபத்தை அடிப்படையாகக் கொண்டு "நான்" இயங்குவதில்லை. மாறாக உளவியல் துறையில் ஈடுபாடு கொள்பவர்கள் தங்களது எழுத்துக்கள் வழியாக, சமுகத்தின் உள நலனை விருத்தி செய்ய "நான்" ஒரு களம் அமைக்கின்றது. வாசிப்பவர்களும் முழு அறிவைப் பெற்றிட துணைபுரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியரிடமிருந்து...

மனித மாண்பு என்பது மனிதப் பண்புகளில் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. ஒவ்வொரு மனிதனும் தன்னுடைய உரிமைகளோடும், மரியாதையோடும், சுதந்திரத்தோடும், சமுதாயத்தில் வாழ விரும்புகின்றான். இவ்வாறு அவன் அடிப்படையில் விரும்புவது மனித மாண்பு எனக் கருதப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனும் சக மனிதனை ஒரு மனிதனாக ஏற்றுக்கொண்டு, சம உரிமையோடு அவனும் வாழ உதவி செய்ய வேண்டும்.

ஆனால் இவ் உலகை பார்க்கின்ற போது நாகரீகம் என்ற பெயரில் மனிதனுடைய மாண்பு அழிக்கப்படுகின்றது. மனிதன் அதிகாரத்தையும் பணத்தையும் பெரிதாக கருதி சக மனிதனை மனிதனாகக் கூட மதிக்க அவன் நினைப்பதில்லை. மனிதனை ஒரு சராசரி ஜடப் பொருளாக பாவித்து தூக்கி எறிகின்ற நிலையில், எதிர்காலத்தில் மனித மாண்பு இருப்புக் கொள்ளுமா என்பது ஒரு கேள்வியே. தொழில்நுட்ப விஞ்ஞான வளர்ச்சியும் இதற்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இவ்வாறான சூழலில் "நான்" உளவியல் சஞ்சிகையானது **'மனித மாண்பு'** என்ற தலைப்பிலே இம் முறை வெளிவருகின்றது. மனித மாண்பு என்றால் என்ன? மனித மாண்பை எப்படி மதிக்க வேண்டும்? சமுதாயத்தில் எவ்வாறாக மனித மாண்பை கடைப்பிடிக்க வேண்டும்? இவை மறுக்கப்படும் போது ஒரு தனி மனிதன் எவ்வாறான கஸ்ர துன்பங்களை அனுபவிக்கின்றான் என்ற பலதரப்பட்ட வினாக்களுக்கு விடை தரும் நோக்கிலே இவ்விதழானது வாசகர்களுக்கு அறிவு சார்பான ஆய்வுக் கட்டுரைகளோடும், ஆக்கங்களோடும், அமையப்பெற்றுள்ளது. ஆகவே இந்த உளவியல் சஞ்சிகைக்கு தங்கள் சார்பாக நாம் பெறுகின்ற ஒத்துழைப்பிற்கும், ஊக்கப்படுத்தலுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

மனிதம் பேணப்பட, மனித மாண்பு நிலைக்க, இன, மத, மொழி, சாதி, அடக்கி ஆளும் அதிகார மோகம் களைவோம். பிரிவுச் சுவர்களை தகர்ப்போம்; மனித மாண்பை மலர வைப்போம்.

**தோழமையில்,**

**அ.சே. அமல்ராஜ், அ.ம.தி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பிற்கு ஊறு விளைவிக்கும் மனித நடத்தைக் கோலங்களில் மாற்றங்களை தோற்றுவித்தல்

உலகம் என்னும் மேடையின் மீது வாழ்க்கை என்னும் நாடகமென இவ்வுலக வாழ்வின் நிலையாமை பற்றி அறிஞர் பெருமக்கள் எடுத்துரைப்பதுண்டு. இக் கூற்று முற்றிலும் உண்மை பொதிந்ததென்பது எல்லோரும் அறிந்த ஒன்று. ஆயினும் ஒவ்வொரு மனிதனும் கானல் நீர் போல தோன்றி மறைந்தாலும் எமது மனித இனத்தின் வாழ்வு நிலையானது, அழிவற்றது என்றும் சில அறிஞர்கள் குறிப்பிடுவதும் உண்டு. இதன் மூலம் நாம் விளங்கிக் கொள்வது யாதெனில் மனித இனம் தோன்றிய நாள் முதல் இவ்வுலகில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டே இருக்கின்றது. இன்னும் பன்னெடுங்காலம் வாழப்போகின்றது என்பதாகும்.

இந்நிலையில் இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொரு மனிதனும் தோன்றி மறைந்தாலும், தன் மனித இனத்தின் அழிவற்ற தன்மைக்கு அவனும் ஒரு காரணியாய் அமைகின்றான் என்ற முடிவிற்கு எம்மால் வர முடிகிறது. ஒவ்வொரு மனிதனும் இவ் உலகில் தோன்றுவது மேலும் மனித உயிர்களை தோற்றுவிப்பதற்கே என்பது உயிரியல் யதார்த்தமாகும். ஆனால் ஒவ்வொரு மனிதனும் எப்படிப்பட்ட மனிதர்களை இவ்வுலகிற்கு விட்டுச் செல்கிறான் என்பதுவே அறிவியல் நோக்கில் பார்க்கப்பட வேண்டிய விடயமொன்றாய் அமைகிறது. ஒவ்வொரு மனிதனும் உடல், உளரீதியாக மாத்திரமன்றி தமது நடத்தைக் கோலங்களிலும் வெவ்வேறு இயல்பினராக காணப்படினும், அடிப்படை மனிதப் பண்பு நடத்தைகளில் ஒன்றித்தவர்களாகவே இருந்தாக வேண்டும். இது மனிதப் பிறப்பியலின் சங்கிலித் தொடர், வாழ்வோட்டத்தில் தவிர்க்க முடியாத நிகழ்வு போல மனித மாண்பினை ஊடு கடத்துவதாகவும் அமைய வேண்டும்.

ஆனால் இன்றைய விஞ்ஞான உலகில் மனித செயல் நிலைகள் ஒவ்வொன்றும் மனித மாண்பிற்கு எதிர் மறையானவையாக, கசப்பான யதார்த்தத்தை உணர்த்துவதாக இருப்பதை அவதானிக்கக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடியதாக உள்ளது. இவ் அவதானிப்புக்களை நாம் பின்வருமாறு வகைப்படுத்த முடியும்.

**ஒன்று:** புகைப்பழக்கம், மதுபாவனை, போதைப்பொருள் பாவனை முதலியன மனித உடலிற்கு அத்தியாவசியமற்றதும், கேடு விளைவிப்பதுமானவை என்பதுடன், மனித நடத்தையில் பெரும் மாற்றங்ளை தோற்றுவிக்கக் கூடிய பழக்கவழக்கங்கள் ஆகும்.

**இரண்டு:** இப்பழக்கவழக்கங்களிற்கு எளிதில் அடிமையாகும் சந்தர்ப்பங்களையும் தன்மையினையும் இளம் தலைமுறையினர் கொண்டுள்ளனர்.

**மூன்று:** இத்தகைய இளையோரின் வாழ்வில் அழிவைப் பரிசளிக்கும் போதைப்பொருள் உற்பத்திக்கான விற்பனையை, தம் வருமான மார்க்கமாக தேசிய சர்வதேச வலையமைப்புக்கள் மற்றும் போதைப்பொருள் சாம்ராட்சியங்கள் உள்ளன.

இவற்றுள் புகைத்தல், மது அருந்துதல் முதலானவை சட்டத்திற்குப்பட்டதாகவும் இப்பழக்கங்களுக்கு அடிமைப்படுவோர் தமக்கும் தமது குடும்பத்திற்கும் மட்டும் பெரிதும் கேடு விளைவிப்பவர்களாகவும் உள்ள அதேவேளை, சட்டவிரோத மது பாவனைகளையும், உடல் நலத்திற்கு பெருங்கேடாகவும், குற்றச் செயல்களுக்கு வித்திடுவதாகவும் அமைகின்றது. போதைவஸ்து பாவனையானது சட்டவிரோதமானது மட்டுமன்றி மிகமோசமான குற்றச்செயல்களை தூண்டுவதாகவும் காணப்படுகின்றது. இன்றைய நாட்களில் இரு மனிதங்களுக்கிடையிலோ அல்லது இரு குழுக்களுக்கிடையிலோ தோன்றும் பகைமையானது சம்பந்தப்பட்டவர் மீது மட்டும் அல்லாது குடும்ப உறவுகள் மற்றும் உடமைகள் மீதும் தாக்குதல் நடத்துமளவிற்கு மோசமான மனநிலையை தோற்றுவிப்பதிலும் மது மற்றும் போதைவஸ்து பாவனையே காரணியாய் அமைவதை அவதானிக்கலாம். இத்தகைய நடவடிக்கைகள், கட்டுப்பாடுகள், சட்ட நடவடிக்கைகளுக்கு அப்பாற்பட்டு வளர்ச்சியுறும் நிலையிலேயே உள்ளன. இவை மனித மாண்பிற்கு எதிரான போக்குகளாகவே இனம் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவீன உலகின் போக்கினை மேலும் நாம் அவதானிப்போமாயின் திரைப்படங்கள், தொலைக்காட்சித் தொடர்கள் மேலும் பல்வேறு இணையத்தளங்கள் முதலானவை ஊடாக இளம் வயதினர் பெறும் அனுபவங்கள் மனித நடத்தைகளில் மோசமான தாக்கங்களை ஏற்படுத்தவல்லனவாகவும் மனித மாண்பினை பரிகசிப்பனவாகவுமே அமைகின்றன. பெற்றோர், மூத்தசகோதரர்கள், முதியோர், ஆன்றோர், ஆசிரியர்கள் எனப்பல தரப்பட்டவர்களை கனம் பண்ணும், மதிக்கும் பண்பும், மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்ற வாக்கிற்கேற்ப பெரியவர்களின் சொற்கேட்டு நடக்கும் உயரிய நடத்தையும் அருகி வருவதையே அவதானிக்க முடிகிறது. குறிப்பாக எமது தமிழ் இளவயதினர் மத்தியில் நமது முன்னோர்களால் மரபொழுங்கு தவறாது கடத்தப்பட்டு வரும் கலை, கலாசார விழுமியங்களை ஏற்று அதன்படி ஒழுகி அடுத்த சந்ததியினருக்கு கையளிக்கும் பண்பும் பழக்கவழக்கங்களும் அருகி வருவதோடு, மேலைத்தேய கலை, கலாசாரங்களே மேலானவை என்ற எண்ணப்பாங்கு மேலோங்குவதையும் காணக்கூடியதாக உள்ளது.

எம் இளைஞர்கள் மனித இயல்பிலே பிரிந்து, புயல் வழி அகப்பட்ட படகுபோல் அடிபட்டுப்போவதை அறிவியல் உலகம் வேடிக்கை பார்ப்பது கவலையான ஓர் விடயமாகும். நம்மத்தியில் மனித மாண்பிற்கு இலக்கணமாய் புனிதமான மனிதப்பிறப்பின் சிறப்புணர்ந்து புண்ணிய சீலர்களாய் சத்தியவான்களாய் எத்தனையோ உத்தமர்கள் வாழ்ந்து காட்டும் அதேவேளை நம் இளையோரில் அனேகமானோர் அலைமேல் துரும்புபோல செல்லும் திசைவழி எதுவென்று அறியாது, கண்ணிருந்தும் குருடராய் உடல், உள போதை காட்டும் பாதை வழியே பயணிப்பதை தடுத்து நிறுத்தி நல்வழி காட்டி அறிவொளி ஊட்டி செவ்வனே வாழவைப்பது சமூகத்தின் கூட்டுப்பொறுப்பாகும்.

கல்வித் துறையில் வல்லவராய் ஒரு சாரார் சாதனை படைக்கும் அதே வேளை இன்னொரு வகையினர், தன்னிலை உணராது, தடம்புரண்டு தீய வழி நோக்கி திசை மாறிப்போவது ஏன்? இப்படி ஒரு கேள்வி எழுவது நியாயமானது தான். ஆனால் இதற்கான பதில் தான் சமூக வாழ்வு என்ற கூட்டுப்பொறுப்பில் ஒவ்வோரு பிரஜையினதும் வகிபாகம் என்ற வகையில் ஒவ்வொருவரையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றவாளிகளாக்குகிறது. கணவனைப் பிரிந்த அல்லது இழந்த நிலையில் தள்ளாடும் குடும்பத்தலைவிகளின் பிள்ளைகள் நாளாந்த வாழ்விற்கே வகைதெரியாத மிக ஏழ்மையில் வாடும் குடும்பங்களில் உள்ள பிள்ளைகள் போன்ற இளையோர் மிக எளிதில் மனித மாண்பினைக் கெடுக்கும் இத்தகைய செயல்களுக்கு ஆளாவதை நாம் அவதானிக்கலாம். அநேகமானோர் அத்தகைய குடும்பங்களை எள்ளிநகையாடி வெறுத்து ஒதுக்குகிறார்களே ஒழிய அவர்களுக்கு உதவும் மனப்பாங்கு இல்லை. இது முழுச்சமூகத்தினதும் குறைபாடு என்றே கொள்ள வேண்டும்.

இவ்வளர்ச்சிப்போக்கிற்கு சமுகத்தில் ஆங்காங்கே வறுமை காரணமாக பிள்ளைகளின் கல்வி மற்றும் நன்நடத்தை முதலான நற்பிரஜைகளின் உருவாக்கத்திற்கான செயல்முறைகளில் அக்கறை செலுத்துவது பெற்றோர் மாத்திரமன்றி நற்பயிர்களின் நடுவே வளரும் களைகளை சுதந்திரமாக வளர அனுமதிப்பதைப் போல முழுச் சமூகமும் மறைமுக காரணியாய் அமைகிறது என்பதும் கசப்பான உண்மை எனலாம்.

மதம், குலம் கிராமம், நகரம் எனப்படும் பல்வேறு பிரி சுவர்களால் பிரிந்து கிடக்கும் முழுச் சமூகமும் மானிடப்பண்பினை நமது கலை, கலாச்சாரத்தை, மனித நேயத்தை, உயரிய மானிட நடத்தையை, எல்லாவற்றிற்கும் மேலான மனித மாண்பினை ஒவ்வொரு இளஞ்சிறார்களின் மனதிலும் நிலைநிறுத்தக் கூடிய வகையில் கூட்டுப் பொறுப்புடன் இயக்க வேண்டும் "ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?" என்ற பழமொழிக்கிணங்க தீய வழிகளில் நாட்டம் கொள்ளக் கூடிய குடும்ப சூழ்நிலையில் வாழும் அடிமட்டத்தில் உள்ள பிள்ளைகளை இளம் வயதிலேயே இனம் கண்டு அவர்களின் கல்வி நற்பழக்கவழக்கங்களை மேலுயர்த்தும் வகையில் தர்மச்செயல்களில் பொது அமைப்புக்களின் ஊடாக ஈடுபடவேண்டும்.

பிள்ளைகளின் குடும்ப சூழலை யதார்த்த ரீதியான தொடர் நடவடிக்கைகள் மூலம் இளையோர் மத்தியில் நன்நடத்தையை மேம்படுத்த முடியும். மனித மாண்பிற்கு எதிரான நடவடிக்கைகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றம் பெறக் கூடிய மனித நடத்தைகளை ஊக்குவிக்கும் மது பாவனை முதலான தீய பழக்கவழக்கங்கள், அடிமட்ட கல்வியில் நாட்டம் குன்றிய இளம்பராயத்தினரையே பெரிதும் ஆட்கொள்ளும் அதே வேளை, திரைப்படங்கள் (குறிப்பாக அண்மைக்காலத்தவை) தொலைபேசி, தொலைக்காட்சி முதலான வசதிவாய்ப்புக்கள் மற்றும் கல்வியறிவு மிக்க குடும்பங்களைச் சேர்ந்த இளம்பராயத்தினரை அதீதமாக ஆட்கொண்டு அவர்களை எவ்வித குறிக்கோள்களுமற்ற மனம் போன போக்கில் வாழப்பழகும் ஒரு மனநிலைக்கு ஈர்த்துச் செல்கின்றன. இத்தகைய இளசுகளின் நடவடிக்கைகளும் மனித மாண்பு என்னும் உன்னத எழிற் கோலத்தினை கறைபடுத்தி அலங்கோலப்படுத்துவனவாகவே அமைகின்றன.

இந்நிலையில் இளம் வயதினரை மனித மாண்பிற்கு பாதகமான வாழ்நிலைக்கு ஈர்த்துச்செல்வதில் முதலாவதாக, மீளமுடியாத மிகப் பின் தங்கிய துன்பியல் வாழ்வில் சிக்குண்ட குடும்பங்களில் இருந்து உருவாகும் நெறிபிறழ்விற்குள்ளானவர்கள், இரண்டாவதாக நல்ல அறிவார்ந்த பண்பிலமைந்த குடும்பச் சூழலும், செல்வச்செழிப்பும் நற்பிரஜைகளின் உருவாக்கத்திலும், அறிவியல் கண்டுபிடிப்புக்களின் மேல் ஏற்பட்ட மோகமும், அதீத ஈடுபாடும் காரணமாக வழிதவறுபவர்கள் என வகைப்படுத்த வேண்டியுள்ளது. இவ்விரு வகையினரும் முழுச் சமூகத்திற்கும் பெரும் சவாலாக உருவாகி மனித மாண்பிற்கு சவால் விடும் எதிரியக்க விசையில் செயற்படும் அபாயம் வெளிப்படையானது.

இவ்விடயம் பேச்சிற்கும் எழுத்திற்கும் மட்டும் வரையறை செய்யாத தீவிர செயல் திறன், திசை வழி நோக்கி இட்டுச் செல்ல வேண்டிய கட்டாயத்திற்குரிய விடயமொன்றாகும். நாம் அபிவிருத்தி என்ற வகையில் கல்வி அபிவிருத்தி, பொருண்மிய அபிவிருத்தி, சுகாதார மேம்பாடு என பல துறைகளிலும் நிகழ்ச்சித்திட்டங்களை வகுத்து சமூகங்களின் புறநிலை வாழ்விற்கு பெரும் பங்களிப்புக்களை செய்வதுடன் மட்டும் நின்றுவிடுகின்றோம். ஆனால் இவ் அபிவிருத்திகளின் மீது வாழும் இளம் வயதினர் அன்பு, அமைதி, மனிதநேயம் முதலான மனித மாண்பினை வலியுறுத்தும் அகநிலை வாழ்வில் மிக கீழ்நிலை நோக்கி அடித்துச் செல்லப்படுவதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டுகொள்வதில்லை. இது அறிவியல் வாழ்வின் மிக மோசமான கண்மூடித்தனமாகும்.

உண்மையில் பரந்துபட்ட சமூகநோக்கின் அடிப்படையில் சமூக நலன் விரும்பிகள் ஒன்றிணைந்து இளையோரை இலக்கு வைத்து உளரீதியான நல்விருத்தியை ஊட்ட வல்ல செயன்முறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்விடயங்களை பொறுத்தவரையில் தூங்கிக் கிடக்கும் சமூகத்தை தட்டி எழுப்பி அவர்தம் மனங்களில் மனித மாண்பினை வலியுறுத்தும் சிந்தனை ஓட்டத்தை கட்டி எழுப்பி கூட்டிணைவுடன் செயலாற்ற வேண்டும். மது மற்றும் போதைவஸ்து பாவனையை ஊக்குவித்து வருமானம் மீட்ட முற்படும் புல்லுருவிகளை, இளம் வயதினர் பக்கம் நெருங்க விடாது ஒரு சிந்தனை வலை அமைப்பை கருத்தியல் ரீதியில் இளையோர் மத்தியில் உருவாக்க வேண்டும். இதற்கு பல்வேறு துறைசார் நிபுணர்களையும் அமைப்பு ரீதியாகவே உள்வாங்க வேண்டும்.

நூறு விழுக்காடு தீமையை மட்டுமே பரிசளிக்க வல்ல வாய் மூல உள்வாங்களுக்கு உட்படும் போதைப்பொருட்களை மட்டுமல்ல மானிடத்தின் நன்மை கருதி விஞ்ஞான மேதைகளின் அர்ப்பணிப்புகளில் உருவான கைத்தொலைபேசி, தொலைக்காட்சி முதலான விஞ்ஞான சாதனங்களின் அதிகரித்த மட்டுமீறிய பாவனையால் உளத்தாக்கங்களுக்கும், வன்முறை எண்ணங்களுக்கும் ஆளாகி சீரழியும் இளம் வயதினரையும் அமைப்பு ரீதியாக உள்வாங்கி அவர்களை நல்வழிப்படுத்த முயற்சிக்க வேண்டும். ஏற்கனவே அரசினால் நடைமுறைப்படுத்தப்படும் சிறுவர் கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் முதலான அமைப்புக்களை மேலும் கிராமங்கள் தோறும் விரிவுபடுத்த வேண்டும். இவ்வமைப்புக்களின் நிகழ்ச்சி நிரலில் இவ்விடயங்களுக்கு முன்னுரிமை கொடுத்து பிரசார நோக்கிலான திட்டங்களை வகுத்து, மழுங்கடிக்கப்படும் இளையோரின் சிந்தனையை தெளிவுறுத்தி வழிப்படுத்த வேண்டும்.


கோயிற் திருப்பணிகள் முதலான தர்மகாரியங்களுக்கு மனமுவந்து பல்வேறு வழிகளில் உதவும் பணம்படைத்த மேலோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளையோரை நல்வழிப்படுத்தும் இவ்வுத்தம நற்பணிக்கும் உதவ முன்வர வேண்டும். வள்ளண்மை மிக்க நல்லோரின் உதவிகளோடு புத்திஜீவிகள், உளவியலாளர்கள் மனித நேயமிக்க பொதுநல விரும்பிகள் மேலே குறிப்பிட்ட நிறுவனங்களுடன் இணைந்து அதிகார தோரணையில் அல்லாது அன்பு, அமைதியான மென்போக்குடன் இளையோரை அணுகி அவர்களுக்கு அவர்களின் அறிவு நிலைக்கேற்ப கீழிறங்கி புத்தி புகட்டி, துறைசார் கல்வி புகட்டி, அவர்களது பிஞ்சு மனங்களை வென்றெடுக்க வேண்டும். இப்படியாக இளமனங்களை உயரிய திசை வழி நோக்கி நகர்த்திச் செல்லும் போது அவர்கள் தவறான பழக்கவழக்கங்களில் ஈடுபாடு கொள்ளும் தன்மை நாளடைவில் அற்றுப்போய்விடும் பின்னர் அவர்களே ஏனையோருக்கு போதனை செய்யும் சாதனையாளர்களாக வளர்ச்சியடைவார்கள். ஆதலால் மனித மாண்பு மேலோங்கும், புனிதமான நற்பிஜைகளை உருவாக்கும், அற்புதமான இத்தூய பணியில் ஏழை, பணக்காரன், படித்தவர், பாமரர் என்ற வேறுபாடுகளால் கூறப்படாமல் எல்லோரும் ஒன்றித்து செயலாற்றுவோமாயின் வெற்றி நிச்சயமே.

**ஆனையூர்க் கவிராயர்**
**ஓய்வு நிலை கிராம சேவகர்**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பு தரும் வாழ்வின் பாடங்கள்

**முன்னுரை:**

மனித மாண்பு மிகவும் ஒழுக்கவியல் கருத்துக்களோடு தொடர்புடையதாக காணப்படுகின்றது. மனித உரிமை பற்றி பேசுகின்ற போதும் கூட மனித மாண்பு தென்படுகின்றது. இதனது வரைவிலக்கணத்தோடு இது தனித்து நிற்பதால் இதனது அர்த்தம் தெளிவுபடுகின்றது என்பது அர்த்தமல்ல. மாண்போடு வாழ்வதும் மாண்பைக் கொடுப்பதும் உரிமை. அது செயலாகின்றது. செயல் உருவாகவேண்டின் அது எமது சிந்தனையில் செல்வாக்கு செலுத்தவேண்டும். மனித மாண்பு என்கின்ற கருத்தியல் தெளிவற்ற சமூக சிந்தனைகளோடு விளக்கமற்ற முறையிலே அதன் தன்மை இழந்து நிற்பது இக்காலத்திலே காண்பது தெளிவாகின்றது. இக்கருத்தியல் சார்பான கட்டுரை மனிதனின் உண்மையான மாண்பை மெய்ப்பிப்பதும் காலத்தின் தேவையுமாகும்.

**வரலாற்றுப் பார்வையில்...**

மனித மாண்பைப் பற்றி சிந்திக்கின்ற போது கடந்த காலங்கள் மற்றும் அதன் வரலாற்று பதிவுகள் எமக்கு ஒரு புதிய விளக்கத்தை தருகின்றது. மனித மாண்பு மிகவும் மதிக்கத்தக்கது, அது மிகவும் பேணப்படவேண்டும் என்கின்ற எண்ணக்கரு இரண்டாம் உலக மகா யுத்தத்திற்கு பின்னரே உணரப்பட்டது. இந்த யுத்த வடுக்கள் தந்த எச்சங்கள் பல்லாயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கையை காவுகொண்டது. இது வரலாற்று உண்மை.

மாண்பு என்கின்ற சொல் சமய கருத்துக்களை தாங்கிச் செல்வதாக காணப்படினும் கிறிஸ்தவ விவிலிய எழுத்துக்களிலே இச்சொல் மிக அரிதாகவே காணப்படுகின்றது. கிரேக்க வார்த்தையான σεμνοτης (semnotes) ஆங்கிலத்திலே 'Dignity' அதாவது 'மாண்பு' என்கின்ற அர்த்தத்தை கொடுக்கின்றது. ஆயினும் αξιοπρε΄πεια (aksioprepeia) என்கின்ற வார்த்தை இன்னும் மிக நெருங்கிய அர்த்தத்தை தருவதாக அமைகின்றது.

புனித தோமஸ் அக்குவினஸ் தனது Summa Theologiae என்கின்ற நூலிலே மாண்பு என்கின்ற வார்த்தையை இலத்தின் மொழியிலே


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

dignitas என்று பயன்படுத்துவதையும் இவ்வார்த்தையானது 185 தடவைகள் இடம்பெறுவதையும் காணலாம். இந்த வார்த்தை அதனது தனித்துவத்தை அடிப்படையிலே தெரிவிப்பதாக அமைகின்றது. உதாரணமாக, தாவரங்கள் கற்களை விட பெறுமதியானவை. அதனது மாண்பு இரண்டு விடயங்களை சமாந்தரமாக வைத்து பார்க்கின்ற போது அதன் பெறுமதி தெளிவாகின்றது. கிரேக்க தத்துவயியலாளர் அரிஸ்டோட்டில் semnotes என்கின்ற வார்த்தையை தனது ஒழுக்கவியல் சார் நூலிலே குறிப்பிடுகின்றார்.

மாண்பு எனும் வார்த்தைக்குரிய இலத்தின் வார்த்தையை 'தகுதி' (worthiness) என்கின்ற வார்த்தைக்குள் கொண்டுவரமுடியும் என்று ஸ்டோய்க் (stoics) தத்துவயியலாளர்களான, சிசேரோ மற்றும் செனேக்கா (Cicero and Seneca) கூறுகின்றனர். இம்மானுவேல் கான்ற் இந்த வார்த்தையை மனித சுதந்திரத்தோடு தொடர்புபடுத்துகின்றார். இது இயற்கையாகவே மனித சாயலோடு தொடர்புபட்டது என்றும், மனிதம் என்பதே மாண்பு தான் என்று கூறுவதும் மனித மாண்புக்குரிய அழகான வரைவிலக்கணமாக அமைகின்றது. ஆகவே, மாண்பின்றி மனிதன் இருக்கமுடியாது. அவன் கருவாகிய கணமிருந்தே அவனது மாண்பு பொருள்படுகின்றது. இது இயற்கையானதே (intrinsic dignity). அவனது சிந்தனை, அவனது செயல், அவனது வாழ்வின் நிலைகள் அனைத்திலும் அவனுடைய சுதந்திரம் செயற்படுகின்றது. இதனால் அவனது மாண்பு பெறுமதியாகின்றது. அவனிடம் காணப்படுகின்ற திறமைகள் அவனது ஆற்றல்கள் எல்லாமே அவனது மாண்பை இன்னும் அதிகம் சம்பாதிக்க வழிவகுக்கின்றது (attributed dignity).

**மனிதனும் மனித மாண்பும்**

பணம் செலுத்தி மனிதன் பிறப்பதில்லை. பிறப்பு இயற்கையானது. அதுபோலவே அவனது மாண்பும் இயற்கையாக அவனுக்கு கொடுக்கப்படுகின்றது. மனித மாண்பு ஒரு கேள்வியாக அமைகின்ற போது அது மனிதன் என்பவன் யார் என்கின்ற கேள்விக்கு பதிலளிக்கின்றது. மனிதனிடம் காணப்படும் தகுதி அவனது வாழ்வின் நிலையையும், யதார்த்தத்தையும் காட்டுகின்றது. அவன் மிக முக்கியமானவன் என்பதை கோடிட்டு காட்டுகின்றது. மனிதன் தனித்துவமானவன், தனது அறிவால் சிந்திக்கக் கூடியவன், உணரக்கூடியவன், தனித்து செயல்படக்கூடியவன். எனவே, அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வின் கூறுகளை பிரித்துப் பார்க்கமுடியாது. அவனிடம் வாழ்வு இருக்கின்றது. வாழ்வை கொடுக்கமுடியும் அதுமட்டுமல்ல புதிய வாழ்வை உருவாக்கவும் முடியும். இதுவே அவனிடம் காணப்படும் சிறப்பான பெறுமதியான இயல்பாக இருக்கின்றது.

மனிதன் தனது மாண்பை மூன்று வகை உறவிலே ஆழ அறிந்துகொள்கின்றான். முதலாவதாக, மனிதன் மனிதனோடு கொண்டுள்ள உறவு: இந்த உறவு மிக முக்கியமானது. இவ்வுறவு தான் அவனை சமூகம் என்கின்ற உறவில் வாழ அழைக்கும். இது சமூகம் கொடுக்கின்ற மாண்பு. இரண்டாவதாக, மனிதன் இயற்கையோடு கொண்டுள்ள உறவு: மனிதன் இயற்கையோடு உறவுகொள்ளும் போது தான் அவன் படைத்த படைப்புக்களிலே தான் உயர்ந்தவன் என்கின்ற மாண்போடு வாழுவான். இயற்கை அவனுக்கு கொடுக்கின்ற மாண்பு. மூன்றாவதாக, மனிதன் இறைவனோடு கொண்டுள்ள உறவு: இவ்வுறவு அவனை ஆன்மீகப் பாதையில் வழி நடத்தும். இறைவனை அறிந்து நேசிக்கின்ற போது அவனது முழு ஆளுமையும் அவனை இயக்குகின்ற தெய்வீக சக்தியை கண்டுகொள்கின்றது. ஆன்மீகம் கொடுக்கின்ற மாண்பு.

**மனித மாண்பு சந்திக்கும் சவால்கள்**

மனிதன் ஒளியை ஏற்றினாலும் இருளில் வாழ்வதை அதிகம் விரும்புகின்றான். இதன் அர்த்தம் என்ன? இந்த உலகிலே தீமைகள் அதிகரித்தும், அதன் விளைவுகள் மனித சிந்தனையிலும், எண்ணங்களிலும், அவனது செயல்களிலும் அதிக தாக்கத்தை செலுத்துகின்றது. பிழைகள் நியாயப்படுத்தப்பட்டு, செய்வது தவறு என்று அறியாமல் போகின்ற நவீன யுகமாகவே மாறிவிட்டது. இதற்கு பல்லாயிரக்கணக்கான காரணங்கள் இருக்கின்றன. இருப்பினும் அவன் மிகக் குறுகிய மன நிலை கொண்டே காணப்படுவது அவனது சுய நலனை தெளிவாகக் காட்டுகின்றது. பல நாடுகளிலே இடம்பெற்ற யுத்தங்களும், அதனால் அநியாயமாக கொல்லப்பட்ட மனித உயிர்களும் மனித மாண்பை மறைக்கின்ற மறுக்கின்ற வரலாற்று நிகழ்வுகளாகிவிட்டன.

எமது கலாசாரத்திற்கு புறம்பான விடயங்கள் பல மனித மாண்பிற்கு சவாலாக அமைந்துவிடுகின்றது. குறிப்பாக மூன்று விடயங்களை அல்லது மனித மாண்புக்கு எதிரான சவால்கள் மூன்றை பற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சிந்தனையை திருப்புகின்றேன். முதலாவதாக, திருமணத்திற்கு முன் கூடி வாழ்வதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது எந்த சந்தர்ப்பத்திலும் நியாயப்படுத்த முடியாது. அண்மைக்காலங்களில் எமது தமிழ் திரைப்படங்களில் திருமணத்திற்கு முன் கூடிவாழும் முறையை மறைமுகமாக ஊக்கப்படுத்திவருகின்றார்கள். மனித சிந்தனையை மிக ஆழ ஊடுருவுகின்ற இந்த சினிமா திரைப்படங்கள் எமது கலாசாரத்தை அல்லது கலாசார விழுமியக் கொள்கைகளை மழுங்கடிக்கச் செய்வதும் வாழ்வுக்கு முரணான கொள்கைகளை நடைமுறைப்படுத்த முயற்சிப்பதும் எமது சமுகத்திற்கான சவாலாக அமைகின்றது.

இரண்டாவதாக, ஓரினத்திருமணம் (samesex marriage). ஆண்களும் ஆண்களும் அல்லது பெண்களும் பெண்களும் கொள்ளும் திருமணம் என்பது இயற்கைக்கு முரணானது. இருப்பினும், இதைத் தான் இன்று உலகம் பல ஊடகங்கள் வழியாக காட்சிப்படுத்தியும், அதை ஊக்கப்படுத்தியும் வருவது, உண்மையான மனித மாண்பை அடிப்படையிலே இழக்கச் செய்கின்றது. இது சமூக விரோதம் நடைமுறை குற்றம். பல நாடுகளிலே இதை சட்டபூர்வமான செயலாக அரசு அங்கிகரித்துவிட்டது. இதைப்பற்றிய பல கற்கை நெறிகள் உருவாகியும் இவற்றால் கிடைத்த பயன் சொற்பமே. இது எமது நாட்டில் ஆங்காங்கே தலைவிரித்தாடுகின்றது என்பதும் தெரிந்ததோர் விடயமே.

மூன்றாவதாக, இக்காலங்களிலே போதைவஸ்துக்கு அடிமையாக போகின்ற நிலை அதிகமாகவே காணப்படுகின்றது. போதைவஸ்து பாவனை ஒரு தலைமுறையையே முழுவதுமாக அழிக்கின்றது. இதன் பின்னனியில் அரசியல் செல்வாக்கு அதிகம் இருப்பதால் இதனது ஆதிக்கம் இன்னும் அதிகமாக இருக்கின்றது. போதைவஸ்து பாவனையால் கல்வி இழந்து, அந்தஸ்து இழந்து, தொழில் இழந்து, குடும்பம் இழந்து, கௌரவம் இழந்து ஏன் மாண்பிழந்து நிற்கும் மனித சமுதாயம் தான் எம்மைச் சுற்றி இருக்கின்றது. இது மிகவும் கவலையை தருகின்றது. களவு அதிகரித்தும், கொலை அதிகரித்தும், பல விழுமியக்கொள்கைகள் இழந்தும் நாம் எமது சமூகத்தை தொலைத்தும் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம். இது எதிர்கால தலைமுறைக்கான அழிப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இணையத்தளமும் மனித மாண்பும்**

மனித சிந்தனைகள் எண்பிக்கும் வளர்ச்சி உலகத்தையே கரங்களுக்குள் கொண்டுவரக்கூடியதாய் அமைந்துவிட்டது. மனிதன் சிந்திப்பது எல்லாமே நிஜமாகிவிட்டது. இது எதை நோக்கி செல்லுகின்றது? 2000 ஆண்டிற்கும் 2015ம் ஆண்டிற்க்குமிடையில் இந்த இணைய வலைத்தளத்தை (internet) பயன்படுத்திய மக்கள் தொகையானது 400 மில்லியனிலிருந்து 3.2 பில்லியனாக அதிகரித்துள்ளது. இதனது இந்த பாரிய வளர்ச்சி கிட்டத்தட்ட இவ்வுலக சனத்தொகையின் பாதி மடங்காக கணிக்கப்படுகின்றது. இப்பொழுது இந்த இணையத்தளம் அனைத்து இடங்களிலும் கிடைக்கக்கூடியதாய் இருப்பதால் அனைவருமே இதைப் பாவிக்கக் கூடியதாய் இருக்கின்றது. 1960 களில் தான் இதனது ஆரம்பம் பதிவிடப்பட்டது. இந்த இணையத்தளத்தினூடாக அறியக்கூடிய அனைத்து விடயங்களும் எமது சிந்தனையை, கற்பனாசக்தியை அளவுகடந்த முறையிலே அதிகரிக்கின்றது.

தொடர்பாடல் என்பது அடிப்படை சமூக முறையாகும். மிக முக்கியமான அடிப்படை தேவைகளில் ஒன்றாகவும் காணப்படுகின்றது. தொடர்புகொள்வது ஒவ்வொருவரின் தார்மீகக் கடமை. இதனால் பெறும் அனுபவமும், அறிவும் தவிர்க்கமுடியாதவை. 2010, 2011ம் ஆண்டுகளில் மத்திய கிழக்கு மற்றும் தென் ஆபிரிக்க நாடுகளை இணையத்தள பட்டியலில் 'முக நூல் புரட்சியாகவும்', 'டுவிற்றர் புரட்சியாகவும்' கொண்டு இணைத்துள்ளனர். இதற்கான காரணமாக இந்த ஆண்டுகளில் அதனுடைய பாவனை விகிதம் அதிகரித்தமையே. எகிப்து நாட்டிலே சில நாட்களுக்கு இந்த இணையத்தளத்தை நிறுத்திவைக்க தீர்மானித்து அதை நடைமுறைப்படுத்தினர். இதனால் அங்கே ஏற்பட்ட பாரிய நெருக்கடிகளுக்கு அந்நாட்டு அரசாங்கம் ஈடுகொடுக்க முடியாமல் போனது. இதை அந்நாட்டு மக்கள் மனித உரிமை மீறலாகவே கருதினர். இணைய வலைத்தளம் எவ்வளவு தூரம் வளர்ந்திருக்கின்றதோ அவ்வளவு தூரம் அதனது தவறான பாவனையும் அதிகரித்துள்ளது. இன்று முக நூலின் பாவனை 1.9 பில்லியன் அங்கத்தவர்களாக பதிவுசெய்யப்பட்டிருக்கின்றது. இதில் அதிக பாவனையாளர்களாக இந்தியாவே காணப்படுகின்றது. இவ்விணையத்தளத்தினால் பலரது வாழ்வுக்கான தெளிவும் அதனால் பல வெற்றியும் கிடைக்கப்பட்டுள்ளது. வாழ்க்கையில் அடையமுடியாத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றியை இணையத்தளம் பெற்றுக்கொடுத்திருக்கின்றது. அதேவேளை இதனது தவறுதலான பாவனையால் பல மோசடிகளும் இடம்பெற்றுவருகின்றது என்பது எமக்கு நன்றாகவே தெரியும். இதனால் மனித மாண்பை இழக்கச் செய்யக்கூடிய அளவுக்கு இதனது பாவனை அதிகரித்துள்ளது.

**இறுதியாக...**

"மனிதம் மலர்ந்திட வேண்டுமே, மனித மாண்புகள் உயர்ந்திட வேண்டுமே, இறைமையின் சாயலே மனிதம்" என்று பல வருடங்களுக்கு முன்பே கேட்ட அழகான கிறிஸ்தவ பாடல் வரிகள் என் ஞாபகம் வருகின்றது. மனித உருவிலே இறைவனை காண்பது என்பது எமது மாண்பை ஆழப்படுத்துகின்றது, பெறுமதியுள்ளதாக மாற்றுகின்றது. நாம் மகிழ்வோடு இருக்கவேண்டும், ஒழுக்க சீலர்களாக இருக்கவேண்டும், பலரின் மரியாதைக்கும் பணிவுக்கும் பாத்திரமாக இருக்க வேண்டும் என்பது தான் எமது வாழ்வின் அடிப்படை கருப்பொருளாகின்றது. மனிதனை சுற்றியுள்ள அனைத்து அம்சங்களும் அவனது மாண்பை குலைக்கக்கூடாது. எம்மை சுற்றியுள்ள உலகம் மாசுபடிந்த உலகம். பிழையை பிழையாக பார்க்க தவறும் உலகம். மனிதனது ஆளுமையை தனித்துவத்தை அறிந்து மதிக்கத் தெரியாத உலகம். இது மாறவேண்டும். இது மாறவேண்டுமென்றால் அதற்கு ஒரே வழி - கல்வி தான். மனிதனுக்கு மாண்பை உணரச் செய்வதும், மாண்பை கொடுப்பதும் கல்வியால் மாத்திரமே முடியும்.

**உசாத்துணை நூல்கள்:**


Ed. Edward Sieh , Judy McGregor, Human Dignity - Establishing Worth and Seeking Solutions, Palgrave Macmillan UK, 2017.

Ed. Jeff Malpas, Norelle Lickiss, Perspectives on Human Dignity: A Conversation, Springer, 2007.

George Kateb, Human dignity, Belknap Press of Harvard University Press, Year: 2011.

https://backlinko.com/facebook-users accessed on 22nd January, 2022.



**ஜேம்ஸ் சுரேந்திர ராஜா, அ.ம.தி**

B.Ph., S. T. L (Rome)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கே தோன்றுகின்றது மனித மாண்பு?

“உள்ளம் பெருங்கோயில் ஊண் உடம்பு ஆலயம்” என்று ஔவையார் கூறியுள்ளார். உள்ளம் என்பது தூய்மையாகவும் அழகாகவும், உள ஆரோக்கியம் உடையதாகவும் காணப்பட்டால் தான் மனித மாண்பு என்ற எண்ணம் மனதில் தோன்றும். மனித மாண்பு என்பது இனம், பாலினம், வர்க்கம், மதம், திறன்கள் போன்றவற்றின் ஊடே ஒவ்வொரு மனித மனங்களிலும் விதைக்கப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றது.

எனினும் மனிதமாண்பு என்பது ஒவ்வொரு தனி நபர் சார்ந்த விடயமாக வளர்க்கப்பட்ட பின்னரே அது ஒருமித்த நபர் சார்ந்த ஒற்றுமையை கட்டியெழுப்பப்படுகின்றது. எனவே மனித மாண்பு என்ற பண்பு ஒவ்வொரு தனிநபர் உள்ளங்களிலும் இருந்து நல்லவிதமாக வளர்க்கப்பட வேண்டும். அவ்வாறு வளர்க்கப்படும் போதுதான் நாட்டு ஒற்றுமை, நல்லிணக்கம், மனித நேயம், என்பன பேணப்படுகின்றது. மாறாக, தவறாக தனிமனிதனுக்கு புகட்டப்படும் போது வன்முறையும். குற்றங்களும், சுயநல தன்மைகளும் அதிகரித்து மனித மாண்பு என்பது சிதைக்கப்பட்டு அழிவுகளே அதிகம் காணப்படும்.

மனித மாண்பின் அடிப்படை விடயங்களாக பின்வரும் நிழற்படம் சித்தரிக்கின்றது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித மாண்பின் அடிப்படையான விடயங்களை நோக்கினால் அவையாவும் ஒரு தனி மனிதனின் உள ஆளுமை சார்ந்த நேரான அம்சங்களாகவே காணப்படுகின்றன. இவ்வாறான ஆளுமைப் பண்புகள் சிறுவயது முதல் வளர்க்கப்படும் விதங்களில் தான் உருவாகின்றதுகின்றது என்கிறார் உளவியளாளரான "எரிக்எறிக்சன்". உண்மைதான் நாம் எதைவிதைக்கின்றோமோ அதுதான் நாளை மரமாக வளரும். இந்த வகையில் "குழந்தைப்பருவ வளர்ப்பு முறைகளும் மனிதமாண்பு வளர்ச்சியும்". என்ற பாணியில் எரிக் எறிக்சனின் "உளச்சமூக கொள்கைகள்" என்பதனை அடிப்படையாக கொண்டு நோக்கலாம்.

பெற்றோர் வளர்ப்பு முறைகள் என்பது கட்டிடத்திற்கு பலமான அத்திவாரம் எவ்வளவு முக்கியமோ அதுபோல சிறுவயதுமுதல் பெற்றோர் பிள்ளைகள் மனதில் விதைக்கும் விடயங்களே அதன் எதிர்கால நேரிய வாழ்க்கையினை தீர்மானிப்பதாக உள்ளது.

எரிக்எறிக்சன் மனிதர்களின் ஆளுமை வளர்ச்சிப் பருவங்களை எட்டு நிலைகளாக நோக்கி விளக்க முயல்கிறார். ஒவ்வொரு பருவத்திலும்மனிதர்கள் செய்த முடிக்கவேண்டிய பணி ஒன்று உண்டு என்றும் அது நிறைவேறாத விடத்து அடுத்தபருவத்தில் தேக்க நிலையை நிலைநாட்டும் என்றும் இங்கு சமூகம் எனும்போது பெற்றோர் பராமரிப்பாளர், உறவினர் சமூக வாழ்வு என்பன செல்வாக்குச் செலுத்துகின்றன என்கிறார்.

**பருவங்கள்**

1. நம்புதல் எதிர் சந்தேகம் அல்லது நம்புதற்கடினம் (பாலகபருவம் - 1 வயது வரை)
2. சுயாதீனம் எதிர் - வெட்கம், சுயஆற்றல் சந்தேகம் (1 ½ வயது முதல் - 4 வயது வரை)
3. முன்னெடுப்பு எதிர் குற்ற உணர்வு (முன்பள்ளி நிலை 4 – வயது வரை)
4. முயற்சி எதிர் தாழ்வு மனப்பாங்கு (பள்ளிப்பருவம் 6 – 12 வயதுவரை)
5. அடையாளங் காணுதல் எதிர்வகிய பங்குக் குழப்பம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கட்டிளமைப்பருவம் (13 – 18 வயது வரை)

6. அன்பு நெருக்கம் - தனிமைப்படுதல் (வளர்ந்தோர் முன்பருவம் 20 – 30 வயது வரை)
7. ஆக்கல் நிலை தேக்க நிலை (வளர்ந்தோர் பருவத்தின் மத்திய கட்டம் 25 – 65 வயதுவரை)
8. ஆளுமை ஒருங்கிணைவு எதிர் அவநம்பிக்கை (65 வயதுக்குமேல்)

**1. பாலகப் பருவம் - 1 வயது வரை**

பிள்ளையின் ஆரம்பப்பருவத்தில் யாரை நம்புவது யாரை நம்பக் கூடாது என்ற தெளிந்த அறிவு பெறுவது இப்பருவத்திலே. இதனை பெற்றோரின் வளர்ப்பு முறையில் இருந்தே பிரித்தறிகின்றது.

### ❖ அன்பும் ஆதரவும் வழங்கும் பெற்றோர்

பெற்றோர் வளர்க்கும் போது அன்பையும், ஆதரவையும் ஒழுங்காகவும் தொடர்ச்சியாகவும் பிள்ளைக்கு வழங்கும் போது அது உலகை நம்பும் பிள்ளையாக உருவாகும். இதனால் தான் ஒரு பாதுகாப்பான உலகில் வாழ்வதாக உணரும். இதனால் பிள்ளைக்கு நம்புதல், சந்தேகப்படுதல் ,என்பவற்றில் யதார்த்தமான எதிர்நோக்கோடு செயற்படும். இதனால் எதிர்காலத்தில் தன்வாழ்வு, உறவு, கல்வி, தொழில் மற்றும் ஏனைய விடயங்களில் ஏமாற்றங்கள் சந்திக்கும் போது அதனை சிறப்பான முறையில் கையாளக் கற்றுக்கொள்ளும். இவ்வாறான வளர்ப்பு முறையில் தான் வளர்க்கப்படுகின்றது. மனித மாண்பின் அடிப்படை விடயத்தில் ஒன்று தான் பராமரிப்பும், பாதுகாப்பும் ஆகும். இப்பண்பு இப்பருவ வளர்ப்பு பாணியில் இருந்து முழுமையாக பிள்ளைக்கு விதைக்கப்படுகின்றது என்பதை இக்கொள்கையில் இருந்து நிருபிக்க முடிகின்றது.

### ❖ அளவுக்கதிகமாக அக்கறை காட்டும் பெற்றோர்

அழுவதற்கெல்லாம் ஓடிவரும் பெற்றோர் இப்பிள்ளை பராமரிப்பு முறையால் அப்பாவித்தனமாக இவ்வுலகை நம்பத் தொடங்குகின்றது. பிறர் தீங்கிழைக்கமாட்டார்கள் என்று யதார்த்தமற்றதாக நம்பும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ நம்பிக்கை வைக்கமுடியா நிலைப் பெற்றோர்

இங்கு பெற்றோர் பிள்ளையை பராமரிக்க இயலாதவர்களாக காணப்படும் போது அல்லது வெறுத்து ஒதுக்குபவர்களாக செயற்படும் போது பிள்ளை நம்புதற்பணியில் இடர்படும் இதனால் தன்னைச் சூழ உள்ளவர்களை எப்போது சந்தேக கண்ணோடு பார்க்கும். இதனால் பிள்ளை ஒதுங்கி வாழ ஆரம்பிக்கும். இங்குதான் மனிதமாண்பு என்பது அழிவடையவும் ஆரம்பிக்கின்றது. மனித மாண்பின் அடிப்படைவிடயமான பாதுகாப்பு பராமரிப்பு, சமூகம் மீதான பார்வை, என்ற அறிகைப் பரப்புகளில் குழந்தை மனங்களில் தவறான எண்ணங்களை விதைத்து நற்பண்புகளை அழிவடையச் செய்கின்றது. என்று இக்கொள்கையின் ஊடாக ஒப்புநோக்க முடிகின்றது.

**2. தவழும் பாலகபருவம்**

தவழும் பாலகபருவத்தில் - 4 வயது வரை எங்கே மனிதம் தோன்றுகின்றது, எங்கே அழிவடைகின்றது, என்று நோக்கினால், இப்பருவத்தில் எப்பணிகளை நான் செய்வது அல்லது பிறரில் தங்கியிருப்பதா என்பதனை தனது சூழலை ஆராய முயலும்போது, பெற்றோர் பொறுமையுடன் நடந்து பிள்ளைக்கு உற்சாகம் வழங்கும் போது, சுயாதீனமாக இயங்குவதில் வளர்ச்சிகாணும். இதனால் தனது பிரச்சினைகளை தன்னால் கையாளமுடியும் என்ற உணர்வு பெறுவர். அத்தோடு சுயகணிப்பும், சுயகட்டுப்பாடும் பொருத்தமானதாக பெறுவர். இங்கு மாண்பினைப் பார்த்தால் சுயமுடிவெடுத்தல், சுதந்திரதன்மை என்ற பண்புகளாக வளர்க்கப்படுகின்றன.

❖ கட்டுப்படுத்தும் பெற்றோர்

பிள்ளை தனது ஆற்றலுக்கு மேலாக செய்யுமாறு வற்புறுத்தும் போது அல்லது பிள்ளை தாமாக செய்யும் வேலைகளை அனுமதிக்காத போது அல்லது சுயமாக இயங்கும் போது ஏழனம் செய்யும் போது பிள்ளை தன்னைப்பற்றி வெட்கப்படும். அத்துடன் தன்னுடைய பிரச்சினையை தன்னால் செய்ய முடியாது என்று சந்தேகப்படும் இதனால் புதிய சவால்களை எதிர்கொள்ள விருப்பம் இல்லாமல் ஒதுங்கிவாழ்வர். இங்கு மாண்பு என்ற பண்பானது சிறுபருவம் முதலே அழிக்கப்படுகின்றது. இவர்கள் வளர்ந்து வரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் தன்னுடைய தேவைகளுக்கே முன்னரிமை கொடுத்து சுயநலவாதிகளாக வாழ்வார்கள் சமுதாயத்தினை எதிரியை பார்ப்பது போல பார்ப்பார்கள்.

### ❖ மிகையான சுதந்திரம் கொடுக்கும் பெற்றோர்

பிள்ளைகளுக்கு அளவுக்கதிகமான சுதந்திரம்கொடுக்கும் போது பெற்றோர் அதனை கவனியாதும் விடும் போது பிள்ளைக்கு எது சரி, எது பிழை என்பதனை பகுத்தறியாது தாழ்வான சுயகணிப்பீட்டை உருவாக்குகின்றது. இது பிள்ளையை தவறான பாதையில் பயணிக்க கற்றுக் கொடுகின்றது.

### ❖ பொறுமையற்ற பெற்றோர்

பிள்ளை தானாக செய்யக்கூடிய வேலைகளை தாம் செய்து கொடுக்க முயலும் போது பிள்ளை நான் கெட்டிக்காரப் பிள்ளையில்லை என்ற உணர்வை பெற்றுக்கொள்ளும் இவ்விரண்டு பெற்றோர் வளர்ப்புப் பாணிகளும், பிள்ளைகள் மனதில் சுதந்திரம், பங்கேற்பு என்பவற்றை அழிவடையச் செய்கின்றது.

**3. முன்பள்ளிப் பருவம்**

அடுத்து நாம் எங்கே மனிதம் தோன்றுகின்றது என்பதில் "முன்னெடுப்பு எதிர் குற்ற உணர்வு என்ற பருவத்தில்" (முன்பள்ளிப் பருவம்) பெற்றோர், ஆசிரியர்கள், பிள்ளைகளை முன்னெடுப்புக்களை மேற்கொள்ள விடாது தடுக்கும் போதும் தட்டிக்கழிக்கும் போதும் தம் சொந்த தேவைகள் விருப்புகள் பற்றி குற்றவுணர்வு அடைவர். இது ஒரு தவறான நெறிப்படுத்தல்.

### ❖ மிகையான முன்னெடுப்பு

பிள்ளை மிகையான முன்னெடுப்பில் ஈடுபடும் போது எவருக்கும் அஞ்சாது தான் நினைத்ததை சாதிக்க முயலும். யார் யார் எல்லாம் பாதிக்கப்படுவர் என்பதை கருத்தில் எடுக்காது தான் நினைத்ததை செய்ய நினைக்கும். இவர்களில் குற்றவுணர்வு என்பது காணப்படாது. இதனால் இவர்கள் சமூக விரோத போக்குடையவர்களாக காணப்படுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ❖ மிகையான குற்றவுணர்வு

குற்றவுணர்வுகள் மிகையாக வளர்க்கப்படும் போது மனத்தடைகள் அதிகம் உருவாகும். இவர்கள் வளர்ந்து வரும் காலத்தில் ஆண்கள் பாலியல் உணர்ச்சி அற்றவர்களாகவும், பெண்கள் உணர்ச்சி மரத்தவர்களாகவும் காணப்படுவர். எனவே மேற்கண்ட மூன்று வளர்ப்பு பாணிகளும் பிள்ளையின் உள்ளங்களில் அதிகமான தீவிரமான எண்ணவோட்டங்களை விதைக்கத் தூண்டுகின்றன. இவை மனித மாண்பை பாதிக்கின்றன.

### ❖ சமநிலை முன்னெடுப்பு

இவர்கள் ஒரு நோக்கத்தோடு செயற்படுவர். இக்கட்டத்தில் இவர்கள் தம் கடந்தகால பிழைகள், சுய மட்டுப்படுத்தல்கள் என்பவற்றை தெரிந்திருப்பதோடு அவற்றை செயற்படுவதற்கான ஆற்றலும் கொண்டிருப்பர். எரிக் எறிக்சனின் கொள்கையின் படி எட்டுப் பருவநிலைகளில் மேற்கண்ட மூன்று பருவங்களிலும் தான், பிள்ளைகள் பெற்றோர்களால் வளர்க்கப்படுகின்றனர். இங்குதான் மனித நேயமும், மனித மாண்பும் விதைக்கப்படுகின்றது. ஏனைய ஐந்து பருவங்களிலும் பிள்ளைகள் தாமாக வளர்கின்றார்கள். இதில் பெற்றோரின் பங்கு என்பது மேற்பார்வையாகவும், ஊக்கமளிக்கக் கூடிய வகையிலும், நல்லவற்றை தட்டிக் கொடுப்பவர்களாகவும், தீயவற்றை தட்டிக்கேட்பவர்களாகவும் அமைகின்றன. இவ்வாறு அமையும் போது பிள்ளைகள் தம் கடமைகளை செய்யும்போது ஆரம்ப பருவ அத்திவாரத்தில் விதைக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாக கொண்டு செயற்படுவர்.

இந்தவகையில் "எந்தக்குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே" என்பது புலமைப்பித்தன் பாடல் வரி. ஆம் பிள்ளைகள் வளர்க்கப்படும் விதத்தில் தான் மனித மாண்பும் வளர்கின்றது. இதனை எரிக் எறிக்சனின் கொள்கையின் பிரகாரம் முதல் மூன்று பருவ பிள்ளை வளர்ப்பு முறைகளில் இருந்து அறியமுடிகின்றது.

**திருமதி கனிஸ்ரன் கஸ்தூரி (B.A. Hons)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

மனிதம் எங்கே?
மனிதத்தை தோற்றுவித்த
மனிதர்கள் எங்கே?

அர்த்தமில்லா வாழ்க்கை
நாடகத்தில்
கற்பனையில் கரைகிறது
இவ் கலியுகம்.
இவை எதனை நோக்கிய
பயணம் இது?

நிம்மதி இல்லை
நிரந்தரம் இல்லை

ஓடி ஓடி உழைக்கும்
மனித கூட்டமே!
உன்னுள் ஒற்றுமை
இல்லையெனில்
நீ மனிதனே இல்லை
என்பதை மறந்து விடாதே
கூடித்திரியும்
பறவைகளிடம் கேள்
ஒற்றுமையினை- அது
உனக்கு புகட்டும்

ஓடித்திரியும்
குழந்தைகள் போல
மூச்சு வாங்கித் திரிபவனே
கொஞ்சம் நில்
காற்றை கட்டிவைக்க
உன்னிடம் எந்த கயிறுகளும்
இல்லை
உண்மையை கொஞ்சம்
உணர்ந்து கொள்

தேடி தேடி சேகரிக்கின்றாய்
இன்றும் தெருவில் தானே
நிற்கின்றாய்
நீ தேடுவதெல்லாம்
தேவையற்றவையே

மனிதத்தை தேடு
மனிதம் வாழும்
மனிதர்களை தேடு
ஆயுதங்களை களைந்திடு
அன்பினை நிலைநாட்டு
மனிதம் இங்கு
மரணித்து கிடக்கின்றது
இவ் மனிதர்கள்
மத்தியில்

உன் ஆசையில்
மனிதத்தை புதைத்து
ஆறுதல் தேடி அலையாதே
மனிதம் இன்றி
மனிதனாய் வாழ்வதாய் விட
நீ மரணித்து
மண்ணுள் புதைவதே மேல்

மண்ணால் படைக்கப்பட்ட
மனிதனுக்குள் கடவுள்
மனிதத்தை படைத்தான்
மனிதனோ
இவ் மாய உலகில்
மனிதத்தை புதைத்தான்

விடை அறியா வாழ்வினில்
எதை எதையோ தேடுகின்றாய்
தேடுவதும் கிடைப்பதில்லை
கிடைப்பதும் நிலைப்பதில்லை
மனிதனே - நீ
மனிதத்தை தேடு
மனிதத்தால் பலர்
உன்னை தேடுவார்கள்

**கவி கிறேஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம் காட்டும் நண்பன்

அர்த்தமுள்ள வாழ்க்கையை வாழவேண்டுமென்பது இறைவனின் ஆசையும் உலகின் தேவையாகவும் உள்ளது. ஆனால் அதனை எல்லா மனிதனும் நிறைவேற்றுகின்றார்களா என்றால் கேள்விக்குறியே. இந் நிலையில் எமக்கான அர்த்தமான வாழ்க்கையை வாழ்வதற்கு, இலக்கை தெரிவு செய்கிறோம். அந்த இலக்கை நோக்கி பயணிப்பதற்கு பல்வேறு சவால்களையும் தடைகளையும் தாண்டியே ஆகவேண்டும். எனவே அவ்வாறான சவால்களை நாம் தனிமனித முயற்சியின் மூலம் அடைய முடியும் என்பது ஒரு கடினமான விடயம் தான். நாம் தெரிவு செய்த அந்த இலக்கை மனித மாண்புடன் சென்றடைய நண்பர்கள் முக்கியமானவர்களாக காணப்படுகின்றனர். இதற்கு வள்ளுவர் அழகாக சொல்லுவார். "உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று ஒரு நண்பனின் அவசியத்தை சிறப்பாக எடுத்தியம்பி இருக்கிறார். அவர் தன்னுடைய 113வது அதிகாரத்தில் ஒரு அதிகாரத்தை நட்புக்கு கொடுத்து ஒவ்வொரு மனிதனுக்கும் நட்பு அவசியம் என்பதை ஆழமாக விதைத்து சென்றிருக்கின்றார்.

**இயேசு பிரான்:** "ஒருவன் தன்னுடைய நண்பனுக்காய் உயிரை கொடுப்பதை விட மேலான அன்பு எதுவுமில்லை" என்று கூறியுள்ளார்.

**நபிகள் நாயகம்:** " நல்ல நண்பன் கஸ்தூரியைப்போல மணம் வீசுவான் ஆனால் பொல்லாத நண்பனோ உலை ஊதுபவனைப்போல துன்பம் விளைவிப்பான்" என்று கூறியுள்ளார்.

**இந்து சமயம்:** மகாபாரதத்தில் குகன், இராமன் நட்பு மிகவும் அழகாக உணர்த்தப்படுகின்றது. இராமனுக்காக குகன் தன்னுடைய உயிரையே பொருட்படுத்தாமல் அன்பு செலுத்தினான். நாம் வணங்கும் தெய்வங்களே தங்களுடைய வாழ்வில் நண்பர் அவசியம் என்பதையும் அதன் அன்பின் ஆழத்தையும் அழகாக உணர்த்தியிருக்கின்றாரகள். இதேபோல் கிரேக்க மெய்யியலில் பாண்டித்தியம் பெற்ற தத்துவ ஞானிகளும் நண்பனின் முக்கியத்துவத்தை அழகாக உணர்த்தியிருக்கிறார்கள்:


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பிளோட்டோ:** "நண்பனை அடைந்தவன் ஒரு முழு மனிதன்"

**அரிஸ்ரோட்டில்:** "இரு ஆன்மாக்கள் ஓர் உடலில் வாழ்வதை நட்பு" என்று கூறுகிறார்.

இவற்றை எல்லாம் ஆழமாக சிந்திக்கும் போது உண்மையில் எம்மிடம் பிளோட்டோ கூறியவாறு அறிவு, ஆற்றல் பாதியே உள்ளன. மிகுதியான பாதி அறிவினை, ஆற்றலை நண்பனிடம் இருந்து பெறும்போதுதான் நாம் முழுமை அடைகின்றோம் என்பது புரிகின்றது.

இவ்வாறாகவே எங்களுடைய பாடசாலைப்பருவ காலம் தொடக்கம் இப்போது வரையும் நாம் ஒவ்வொரு நண்பர்களைப் பற்றியும் அறிந்திருப்போம், அவர்களுடன் பழகியிருப்போம். அதைவிடவும் அவற்றில் உண்மையான நண்பர்களை அடையாளம் காண்பதும் அவர்களை நிலை நிறுத்துவதும் ஒருவகையான சவாலாகவே காணப்படுகின்றது. இவற்றின் தெளிவுகளைப் பொறுத்தே நாம் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக வாழ்வதா, அல்லது மன அழுத்தத்துடன் வாழ்வதா, மனித மாண்புடன் வாழ்வதா என்பது தங்கியுள்ளது என்பதே வெளிப்படையான உண்மையுமாகும்.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் பரீட்சித்து எமது வாழ்க்கையின் எதிர்காலத்தில் மகிழ்ச்சியாக வாழவேண்டுமானால் உண்மையான நண்பர்கள் போலியான நண்பர்கள் போன்றவர்களை தெளிவாக இனங்கான வேண்டும். அவ்வாறு போலியான, உண்மையான நண்பர்களை அறிந்து கொள்வதற்கு 05 விடயங்களை முன்வைக்கின்றேன்:

**1. சுயநலம் கொண்டவர்கள்**

உண்மையில் போலியான நண்பர்கள் சுயநலம் கொண்டவர்களாக, தங்களுடைய நலனிலே மாத்திரம் அதிக அக்கறை கொண்டவர்களாக காணப்படுவர். எங்களை வைத்து தாம் எப்படி பயன் பெற முடியும் என்பதையே அதிகம் சிந்திப்பர். ஆனால் உண்மையான நண்பர்கள் தன்னைப்போல நண்பனின் நலனிலும் அதிக அக்கறை கொண்டவர்களாகக் காணப்படுவர். நான் வெற்றி பெற வேண்டுமென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயநலமில்லை. மாறாக நான் மட்டும் முன்னேற வேண்டுமென்பதே சுயநலம் என பல அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். எனவே சுயநலத்தில் உயர்நிலையில் இருக்கும் நண்பர்களை இனங்கண்டு அவர்களிடமிருந்து விலகி இருக்க வேண்டும்.

**2. இரகசியம் பேணல்**

போலியான நண்பர்கள் இரகசியம் என்னும் விடயத்தில் கவனம் அற்றவர்களாகக் காணப்படுவர். இவர்கள் நண்பன் தன்னிடம் கூறி ஆறுதலடையும் இரகசியங்களை சமூக மட்டத்தில் கொண்டுசென்று அபகீர்த்தியையும், அவமானத்தையும் ஏற்படுத்துபவர்களாக காணப்படுவர். இப்படியான நிலையினால் பலர் தற்கொலை செய்யும் அளவுக்கு தூண்டப்படுகின்றார்கள் என்பது கவலைக்குரிய விடயமாகும். ஆனால் உண்மையான நண்பர்கள் நண்பன் கூறும் இரகசியங்களை சிதறவிடாமல் கச்சிதமாக பாதுகாத்து வைத்திருப்பவர்களாகக் காணப்படுவர்.

**3. வன்மைத் தன்மையுடன் பழகுதல்**

இவர்களை கண்டுகொள்வது கடினம் தான். ஏனென்றால் அவர்கள் மனதளவில் கொண்டுள்ள வன்மைத்தன்மையை இலகுவில் காட்டிக்கொள்ள மாட்டார்கள். எனினும் அவர்களின் சில சில விடயங்கள் அவற்றை காட்டிவிடும். எங்கள் வெற்றி, முன்னேற்றம் போன்றவற்றில் அவர்கள் காட்டும் மனோபாவம் இவற்றை தெளிவாக எடுத்துக்காட்டும். ஆனால் உண்மையான நண்பர்கள் எங்களுடன் பழகும்போது தூய உள்ளத்துடன், உண்மையாக பழகுவார்கள். எனவே உண்மையான அன்பு கொண்டவர்களை நாங்கள் கண்டுகொள்ள வேண்டும்.

**4. சிறந்த தொடர்பாடல்**

போலியான நண்பர்கள் சிறந்த தொடர்பாடல் இல்லாதவர்களாக காணப்படுவர். தங்களுக்கு தேவை ஏற்படும்போது அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்வார்கள். பின்பு மாயமாகி போய்விடுவார்கள். பின்பு அடுத்த தடவை தங்கள் தேவையின் போது தான் தொடர்பு கொள்வாரகள். எங்களுடைய அவசர தேவையின் போது அவர்களை இனங்கண்டு கொள்ள முடியும். இப்படியான போலியான நண்பர்களின் தொடர்பு தற்காலிகத்தன்மை கொண்டதாக காணப்படும். ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையான நண்பர்கள் எங்களின் குடும்ப நலனிலும் அக்கறை கொண்டவர்களாக, தொடர்பாடலை சிறப்பாக பேணுபவர்களாக காணப்படுவர்.

**5. தோல்வியை அதிகம் விரும்புவார்கள்**

போலியான நண்பர்கள் எங்களின் தோல்வியை அதிகம் விரும்புவர்களாக, அதிலே மகிழ்ச்சி அடைபவர்களாக, சமூகத்துடன் இணைந்து எங்கள் தோல்விகளை விமர்சிப்பவர்களாக காணப்படுவர். இப்படியான பல போலியான நண்பர்களை நம்முடைய வாழ்க்கையில் பலரை நாம் கண்டிருப்போம். ஆனால் உண்மையான நண்பர்கள் தோல்வியின் போது எங்களை தேற்றி, வெற்றியடையக் கூடியவாறு எங்களுக்கு ஆறுதலும், உதவியும் அளிப்பவர்களாகக் காணப்படுவார்கள்.

மேலே குறிப்பிட்டவாறு நீங்கள் ஆழமாக சிந்தித்து பாருங்கள். உங்கள் நண்பர்கள் எந்த வர்க்கத்தை சார்ந்தவர்கள் என்று. நீங்கள் அவர்கள் மூலம் சந்தோசம், வெற்றி அடைந்திருப்பீர்களாக இருந்தால் உண்மையான நண்பர்கள் வட்டத்தை சேந்தவர்களாக அவர்கள் காணப்படுவர் என்பது தெளிவாகும். எனவே ஆழமாக சிந்தித்து அறிந்துகொள்ள வேண்டியது கட்டாயமாகும். போலியான, உண்மையான நண்பர்களை எவ்வாறு இனங்காண முடியும் என்பதை தெளிவாக ஐந்து விடயங்களுக்கூடாக கூறியுள்ளேன். எனினும் எங்களுடைய வாழ்க்கையில் உண்மையான நண்பர்களை அதிகரிப்பதற்கான ஐந்து விடயங்களையும் கூறுவது சிறப்பானதாக அமையும். என எண்ணுகிறேன். அந்தவகையில் எமது வாழ்க்கையில் உண்மையான நண்பர்களை அதிகரிப்பதற்கான ஐந்து விடயங்கள் பின்வருமாறு:

**1. புரிந்துணர்வு**

பொதுவாக நண்பர்கள் தான் எமக்கு ஏதும் செய்ய வேண்டும், நாம் நண்பர்களுக்கு எதுவும் செய்யவேண்டியதில்லை என்ற ஒரு குறுகிய மனப்பாண்மையுடன் வாழ்ந்து வந்திருப்போம். நிச்சயமாக இதனை நாம் மாற்ற வேண்டும். அவற்றில் முதலாவது சிறந்த புத்துணர்வு இருக்க வேண்டும். நண்பன் பற்றிய விடயங்களை, அவனின் குடும்ப சூழல், தனிப்பட்ட விடயங்கள் எல்லாவற்றையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நன்றாக புரிந்திருத்தல் அவனை எங்கள் மேல் அதிக பற்றை தோற்றிவிக்க காரணமாக அமையும்.

**2. உதவி செய்தல்**

நண்பன் இன்னல்கள், துன்பத்தினால் வாடும்போது நண்பனுக்கு உதவி செய்வதன் மூலம் அவனின் உண்மையான நட்பை நாம் பெற்றுக் கொள்ள முடியும். குறிப்பாக பண உதவிதான் செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை. மாறாக ஆதரவு, இரக்ககுணம், ஊக்கப்படுத்தல் போன்றனவே நண்பனின் இக்கட்டான சூழலில் பேருதவியாக அமையக்கூடும்.

**3. தொடர்பாடலைப் பேணல்**

சிறந்த தொடர்பாடலைப் பேணுவது இன்றியமையாததாகும். நாம் எம்முடைய நாளாந்த வாழ்விலே இதனை நன்கு உணர்ந்து இருப்போம். பல்வேறு நிறுவனங்கள், நிறுவனத்தினை சிறந்த நிலைக்கு கொண்டுசெல்வதற்கு சிறந்த தொடர்பாடல் ஆற்றல் கொண்ட வரவேற்பாளரை கொண்டிருப்பார்கள். வரவேற்பாளரின் தொடர்டபாடல் திறனிலேயும் அந்த நிறுவனத்தின் உயர்வு தங்கியுள்ளது. இவற்றை எம்முடைய வாழ்வில் ஒத்துநோக்கிப்பார்க்கும் போது அந்த பண்பு நண்பன் என்னும் விடயத்திலும் தங்கியுள்ளது. எனவே சிறந்த தொடர்பாடலை நாம் பேண வேண்டும்.

**4. நம்பிக்கை**

சிறந்த நம்பிக்கையை நண்பனிடம் விதைக்க வேண்டும். ஒரு திருமண உறவில் கணவன் மனைவிக்கிடையில் எவ்வாறான தூய அன்பு காணப்படுகின்றதோ அதே போன்று எனக்கும் நண்பனுக்கும் இடையிலான உறவிலும் நம்பிக்கை பேணப்படவேண்டும். கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் நம்பிக்கைத் தன்மை இல்லையென்றால் அந்த உறவு நீடிப்பது கடினம். எனவே நம்பிக்கை ஆழமாகக் காணப்பட்டால் நண்பனின் அன்பை அதிகமாக அனுபவிக்க முடியும் எனலாம்.

**5. இரகசியம் பேணல்**

இரகசியத்தை சிறந்த முறையில் பேண வேண்டும். நண்பன் கூறும் விடயத்தை அவனுடைய நம்பிக்கைக்கு பாத்திரமாக அதனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிக்காக்க வேண்டும். அவனின் அனுமதி இன்றி அதனை வெளியிடாதிருப்பது அவனுக்கும் எனக்கும் இடையில் ஆழமான அன்பை விதைக்கும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் நண்பனுடைய இக்கட்டான நிலையிலும், என்னுடைய இக்கட்டான நிலையிலும் இருவரும் புரிந்துகொண்டு ஆறுதலடையும் நிலை உருவாகும் எனலாம்.

இவ்வாறாக மேலே போலியான, உண்மையான நண்பர்களை இனங்காண்பதற்கு ஏற்ற ஐந்து விடயங்களும், அதற்கு அடுத்தபடியாக எவ்வாறு உண்மையான நண்பர்களை எங்களுடைய வாழ்வில் அதிகரித்துக்கொள்ள முடியும் என்பதற்காக ஐந்து விடயங்களையும் முன்வைத்திருக்கின்றேன். இதனை வைத்து உண்மையான நண்பர்களை தெரிந்தெடுப்பதும், அதன் மூலம் மனிதம் காட்டும் நண்பனும், நானும் சவால் நிறைந்த இந்த உலகை வெற்றி கொள்வதற்கான வாய்ப்பினை உருவாக்க முடியும் என்பதும் யதார்த்தமான உண்மையாக காணப்படுகின்றது. "இறுதியாக இருப்பதோ ஒருவாழ்வு. வாழ்வதும் சொற்பகாலமே. இதில் நமது அன்பினாலும், ஆதரவினாலும் இன்னொருவருக்கு வாழ்க்கை மலர்கின்றதென்றால், அவருக்கு கிழக்கு வெளிக்கின்றது என்றால் நான் ஏன் பகலவனாக மாறக்கூடாது?" என்ற கேள்வியை உங்களிடம் முன்வைத்து வாழ்கின்ற வாழ்க்கையை எனக்கும், மற்றவருக்கும் பயனுள்ள, அர்த்தமான மனித மாண்பு மிக்க வாழ்க்கையை வாழ்வோம்.

**பத்மசேனன் சனோசன்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நான்" உளவியல் சஞ்சிகைக்கான நேர்காணல்

**உளவள சீராளர்: திருமதி. கோகிலா மகேந்திரன்**

**செவ்வி கண்டவர்: செயோன்**

**தங்களது இலக்கிய மற்றும் உளவியல் அனுபவங்கள் பற்றிய அபிப்பிராயம் எவ்வாறு உள்ளது?**

இலக்கிய அனுபவம் என்பது மனித இனத்தின் கற்பனை ஆற்றலை விருத்தி செய்வதற்கான பயிற்சி என்று ஒரு வகையில் கருதலாம். ஆழ்ந்த இலக்கிய வாசிப்பிலே கற்பனைப் பாத்திரங்களைச் சந்திப்பதும், அவர்களுக்கான தனிப்பட்ட உலகில் வாழ்வதும், அவர்களின் இன்ப துன்பங்களில் நாமும் கலப்பது, போன்று உணர்வதும் வாழ்வின் விழுமியங்களை மதிப்பிடும் சந்தர்ப்பங்களினூடு உண்மையைத் தரிசிப்பதும், வாழ்வின் சிக்கல்களை ஆக்கபூர்வமான முறையில் அறிவதும், மிகச் சிறந்த அனுபவங்கள் தானே! இலக்கியமானது எம்மை நேரம் என்ற கணியத்தில் முன்னும் பின்னும் அழைத்துச் செல்வது இன்னொரு சிறப்பு.

மனித சரித்திரம் எவ்வாறு உருவாகின்றது? அது எவ்வாறு இது வரை பதியப்பட்டுள்ளது? என்பதைச் சரிவரப் புரிந்து கொள்வதற்கான திறவுகோலும் இலக்கியந் தான். இலக்கியங்களைப் புதிதாகப் படைத்தல் என்று வரும் போது, அங்கே கற்றல், கிரகித்தல், பிரயோகித்தல், புதிய தகவல்களைத் தொகுத்தல், பிரச்சினைகளைத் தீர்த்தல், ஆக்கத் திறனை விருத்தி செய்தல், நினைவாற்றலை மேம்படுத்தல், மொழி வளத்தை முன்னேற்றுதல் போன்ற பல வகைப்பட்ட மனிதத் திறன்களோடு தொடர்புபடுவதால் நல்ல ஆளுமை விருத்தி ஏற்படுகின்றது என்ற பிரக்ஞையே உன்னத அனுபவம் எனலாம்.

உளவியலைக் கற்கும் போதும் சரி, கற்பிக்கும் போதும் சரி, மனிதத் தொடர்பாடல் விருத்தியாவதும், மனித உறவில் முன்னேற்றம் ஏற்படுவதும் நிறைந்த திருப்தி தரும் அனுபவங்களாகும். இதனால் சுய ஏற்றுக்கொள்ளல் இடம் பெறுவதோடு, சுய கணிப்பும் உயருகின்றது. எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளும் நடத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோலங்கள் இருந்தால் அவை மாற்றம் காண்பதோடு எமது சொந்த உள நலத்திற்கும் பாரிய உதவி கிடைக்கின்றது. பயண அனுபவம் என்பது எப்போதுமே இழந்த சக்தியைப் புணரமைப்பதற்கான சிறந்த வழி. இந்தப் பூமியில் பயனுறச் செய்வதற்கு இன்னும் எவ்வளவோ உள்ளன என்பதை எடுத்துரைக்கும் நேரம், பயணம் செய்யும் காலம். மேற்குறிப்பிட்ட அனுபவங்கள் அனைத்தினூடும் நானும் சென்றிருப்பது, செல்லப் போவது கொடுப்பனவு ஆகும்.

**மக்களிடமே உளவியலுக்கான தேடலறிவு வளர்ச்சி கண்டுள்ளதா? இளையோரை இந்த அறிவு சென்றடைய ஆசிரியர்கள், உளவியலாளர்கள் என்ன வழிகளை முன்னெடுக்கலாம்?**

உலகத்திலும் சரி, இலங்கையிலும் சரி, அறிவு வளர்ந்து தான் வருகிறது. அதனை ஆய்வுகள் காட்டி நிற்கின்றன. மெதுவாகவா வேகமாகவா என்பதில் நாட்டுக்கு நாடு வேறுபாடுகள் இருக்கலாம், மாணவர்களிடையேயும் பொதுவாக மக்களிடமும் நெருக்கீடுகளைக் கையாளுவதில் ஒரு போதாமை தெரிவதும் உண்மை, தான். மாணவர்களிடையே உளவியல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் ஆசிரியர்கள் முக்கிய பங்காற்ற வேண்டும். அவர்கள் தங்களது அறிவையும், ஆற்றலையும் அற்றைப்படுத்திக் கொள்வதோடு, பிள்ளைகள் ஒருவரோடு ஒருவர், மனந்திறந்து கதைக்க ஊக்குவிப்பது, இணைபாடவிதானச் செயற்பாடுகளில் தாராளமாகப் பங்குபற்ற வைப்பது, போன்ற இலகுவான விடயங்களே பெரிய மாற்றங்களைச் செய்யும். மக்கள் தங்களுடைய நெருக்கீடுகளைக் கையாளவும் உணர்வுச் சமநிலையை விருத்தி செய்யவும் தேவையான வேறு பல விடயங்களை உளவியலாளர்கள் இன்னும் ஆழமாகவும் அகலமாக விரிந்த பரப்பிலும் செய்யலாம். ஒழுங்கான உடற்பயிற்சி வாங்க வேண்டும் என்ற எண்ணமாக மாற்றுதல் ஏனைய உயிர்கள் மீது கருணையும் இரக்கமும் காட்டுதல் போன்ற சில்லறை விடயங்களை அவர்களுடாகச் சமூகத்தில் பரவினால் அதுவும் நல்ல விளைவுகளைக் காட்டும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தங்களின் உளவியல் வழிகாட்டல்கள், பயிற்சிகள் ஆகியவற்றில் எந்த மட்டத்தினர் ஆர்வம் காட்டுகிறார்கள்? பயிற்சி பெறுவோர் மக்களிடம் எப்படிப் பயன்படுத்துகிறார்கள்?**

என்னை அறிந்த ஆசிரியர்கள் அதிகம் ஆர்வம் காட்டுகிறார்கள். ஆயினும் வங்கி உத்தியோகத்தர்கள் முதல் வைத்தியசாலைகளுடன் தொடர்புடையோர் வரை பலரும் வருவதுண்டு. அவர்கள் தாம் பெற்ற திறன்களையும், அறிவையும் தமது குடும்பத்திலும், பணி செய்யும் இடங்களிலும் பிரயோகிப்பார்கள்.

**ஆரம்ப காலம் முதல் "நான்" சஞ்சிகையுடனான உறவு தொடர்பான அனுபவம் பற்றி என்ன கூற விரும்புவீர்கள்?**

"நான்" சஞ்சிகையுடனான எனது உறவு ஏறத்தாழ நாற்பது வருடங்களுக்கு மேற்பட்டது. தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய காலத்தில் (1980 களின் முற்பகுதி) "நான்" சஞ்சிகையின் வாசகராகிய நான் அதே 80களின் பிற்பகுதியில் சஞ்சிகைக்கு எழுதத் தொடங்கினேன். அப்போது உளவளத் துணையாளர் பயிற்சியை ஒழுங்காகப் பெற்றிருக்கவில்லை. எனது சொந்த வாசிப்பின் மூலம் பெற்ற அறிவை ஆதாரமாகக் கொண்டே எழுதினேன். எனது வாசிப்பு அனுபவத்திலும், ஒரு உளவியல் சஞ்சிகையாக முதன் முதலில் அறிமுகமாகியது "நான்" சஞ்சிகைதான்.

**"நான்" சஞ்சிகையின் புதிய வாசகர்களுக்கான தங்கள் வழிகாட்டல் என்ன?**

கருத்தூன்றி, ரசித்து வாசியுங்கள். வாசித்த விடயம் பற்றி நண்பர்களுடன் கலந்துரையாடுங்கள். விவாதம் செய்யுங்கள். புதிய வாசகர்களுக்கும், மாணவர்களுக்கும், அறிமுகம் செய்யுங்கள். சஞ்சிகையைப் பெற்றுக் கொள்வதில் இடர்படுவோர்க்கு நீங்கள் வாசித்து முடித்த பிரதிகளை இலவசமாக கொடுத்து உதவுங்கள்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாண்புறு மனிதம் மனிதம் மலர...

மாண்புறும் மனிதம் மலர வேண்டுமானால் மனப்பாங்கில் ஏற்படும் மனமாற்றமே சமுதாய மாற்றத்தின் அடித்தளமாகும். இன்று தனி மனிதர்கள் தமக்குள்ள மரியாதை மதிக்கப்பட வேண்டும் என்ற சிந்தையில் உள்ள தருணம், மனித மாண்பு மதிக்கப்படாத நிலையில் பல முரண் நிலைகள் உருவாக காரணமாகிறது என்பதினை அன்றாட செய்திகள் வெளிப்படுத்துகின்றது. எமது தொடர்பாடலில் ஏற்படும் முரண்பாடான வார்த்தைகள், தவறான புரிதல்களாலும், உள்ளொன்று வைத்து பிறிதொன்றை உரைப்பதாலும், சுயநல எதிர்பார்ப்புடன் பிறர் மீது கொளுஞம் நட்பும் காதலும் ஏமாற்றம் காண்பதாலும், மனித உறவுகளில் விரிசல்கள் ஏற்படக் காரணமாகின்றது. "எவரையும் அடக்கி ஆளாமலும், எவராலும் அடக்கி ஆளப்படாமலும் இருப்பவனே உண்மையில் சிறந்த மனிதன்'' என்பார் அறிஞர் ஜோசப் கால். இக் கூற்று எமது வாழ்விலும் மதிப்பிட்டு பார்க்கப்பட வேண்டும்.

எந்த உறவிலும் ஏற்றத்தாழ்வு, பாரபட்சம், உயர்தவன், தாழ்ந்தவன் என்ற தவறான கொள்கைளைகளும், மனித மனங்கள் மனித உயிருக்கு மதிப்பளிப்பதில் சமநிலையற்ற தன்மை போன்ற நிலைகளும், ஒருவர் தன்னைப்பற்றிய தாழ்நிலையை மனதில் வளர்த்து, தவறான செயல்களில் எவ்வித தயக்கமுமின்றி ஈடுபடவும் காரணமாகின்றது. இதுவே இன்றைய வாழ்வின் யதார்த்தமாகும். "அனைவரும் சுதந்திரமாய் இருக்கும் வரை தனி மனிதன் எவரும் சுதந்திரமாய் இருக்க முடியாது. அனைவரும் ஒழுக்கமாய் இருக்கும் வரை தனி மனிதன் எவரும் ஒழுக்கமாய் இருக்க முடியாது. அனைவரும் இன்பமாய் இருக்கும் வரை தனி மனிதன் எவரும் இன்பமாய் இருக்க முடியாது" என்ற ஹெர்பெட்ஸ் பென்ஸரின் கூற்று இங்கு சாலப்பொருந்தும். இது மனித மாண்பின் சிறப்பாகும்.

சிறுவர் முதல் பெரியவர் வரை வாழ்வில் பிறர் தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதனையே எதிர்பார்க்கிறார்கள். என்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதைப் போலவே, பிறரை நாம் ஏற்றுக் கொள்கின்றோமா என நாம் எமது செயல்களை மதிப்பிடுப் பார்க்கும் போதே தனி மனித தவறுகள் உணர வழிபிறக்கும். மனித மாண்பு என்பதன் உயர் நிலையிற்கு மதிப்பு கொடுப்பவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான், பலரது நட்பிற்கு இலக்கணமாகவும், சமூக மட்டத்திலும் உயர்த்தப்படுகிறார்கள். இதற்கு பணமோ அல்லது பதவியோ தேவையில்லை. மனமாற்றத்தின் மறுவடிவமான நற்செயல்களே போதும்.

உண்மையில் சிறந்த மனிதனை அவனது பண்புகளால் இனங்கண்டு கொள்ளலாம். "நோக்கத்தில், பெருந்தன்மையில், செயலாக்கத்தில், மனிதாபிமானத்தில், வெற்றியில், நிதானம் தவறாமையில் வாழும் ஒருவனே சிறந்த மனிதனாகின்றான்" என்ற ஒட்டோ பிஸ்மார்க்கின் கூற்றுக்கு ஏற்ப வாழும் ஒருவனே மனித மாண்பின் சாட்சியாகிறார். எல்லாவற்றிலும் எமது சிந்தனை, சொல், செயல் என்பன சுயத்தின் மாண்பாக முன்னேறிச் செல்ல வேண்டும். மனித மனங்களின் நன்மதிப்பை பெற்றிட முதலில் மனப்பாங்கின் மாற்றம் இன்றியமையாதது. இவற்றை பிறரிடமிருந்து எதிர்பார்ப்பதை தவிர்த்து என்னிலிருந்து தொடரும் நாள் இன்றாக அமைந்திடின் "நான் வளர்ந்தால் நாம் வளரும்" நாளாக நாளை அமையும்.

**கலாபூசணம் செ. ஜோசப் பாலா**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மத வழிபாடும் மனித நேயமும்

மனித நாகரிகம் தோன்றும் போதே மதமும் தோன்றிவிட்டது. தன்னையும் தன்னைச் சுற்றி உள்ளவர்களையும் உற்று நோக்கிய மனிதன் தன்னைக் கடந்த சக்தி மீது நம்பிக்கை கொண்டான். தன்னிலும் இயற்கையிலும் நிறைவை உணர முடியாத மனித இனம் முழுமையான ஒன்றைத் தேடியது. காலச்சக்கரத்தில் இறைவன் பற்றிய மனிதனது சிந்தனைகள் பல்வேறு பரிமாணங்களையும் பெற்றன. அவை பல்வேறு மதங்கள் உருவாக வழி அமைத்தன. மதம் மனித உள்ளத்தில் அன்பை விதைத்து, அமைதியை அளித்து, மனித நேயம் போற்றி அனைவரையும் இறைவன்பால் அழைத்துச் செல்லவே அமைக்கப்பட்டுள்ளது.

இந்து மதம் தருகின்ற பக்திநெறி, இஸ்லாத்தில் பிறந்து வந்த ஒழுக்கநெறி, புத்தத்தின் புகழ்பாடும் கருணைநெறி, புனிதமான சமணத்தின் சாந்தநெறி, கிறிஸ்தவர்கள் பேணுகின்ற அன்புநெறி, பக்தி, ஒழுக்கம், பொறுமை, வலிமை, கருணை, சாந்தி, அன்பு இவையெல்லாம் மனித நேயத்தின் மதிப்பீடுகள், மனிதன் மனிதனிடத்திலும், இறைவனிடமும் ஆழமான உறவு கொள்ள நமக்கு தேவைப்படுகின்றன. மதங்கள் பலவிதமான வழிபாட்டு முறைகளைக் கொண்டுள்ளன. பொதுவாக எமது உணர்வுகளின் மையமாக விளங்குவது ஊர்களின் கோயில்களே. "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது ஔவையாரின் அருள்வாக்கு சமய வெறுபாடு இன்றி அனைவரும் கடைப்பிடிக்கும் நடைமுறை இதுவாகும்.

நமது மக்கள் ஆர்வமாகவும் ஆடம்பரமாகவும் கொண்டாடும் நிகழ்வு எதுவென்றால் கோயில் திருவிழா. ஊர்களுக்கு மட்டுமல்ல மக்கள் வாழ்வுக்கும் மையமாக இருப்பது கோயிலே. கோயில்கள் இறை உணர்வைத் தூண்டி எழுப்பவும், சமய நம்பிக்கையைப் புதுப்பித்து ஆழப்படுத்தவும் உதவுகின்றன. இத்தகைய சமய நோக்கங்களுக்காக மட்டும் அல்ல பல சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு நோக்கங்களுக்காகவும் கோயில்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. அந்தந்த ஊர் அல்லது சமூகத்தைச் சாந்தவர்கள் ஒன்று கூடி வரும் இடமாகவும் (வெளிநாடுகளில் உள்ளவர்கள் கூட) அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழும உணர்வையும் கூட்டுறவையும் சுற்றங்களாகவும் அவர்களது சமூக உணர்வின் சின்னங்களாகவும் அங்குள்ள கோயில்கள் விளங்குகின்றன.

கோயில்களையே மையமாகக் கொண்டு நம் நாட்டு மக்கள் தங்களது அன்றாட வாழ்க்கையைத் தொடர்ந்தாலும் அவற்றின் உண்மையான அர்த்தங்களையும் உயர் நோக்கங்களையும் அவர்கள் சரியாகவும் முழுமையாகவும் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என கூற முடியாது. இது போல சமய சமூகங்கள் அவற்றை மிகத் தவறான முறையிலும் உண்மையான நோக்கங்களுக்கு மாறாகவும் பயன்படுத்துகின்றனர். கோயில் பற்றி மக்கள் கொண்டிருக்கும் கருத்து "அது கடவுளின் வீடு" என்பதே எல்லா இடங்களிலும் நிகழ்வுகளிலும் கடவுளின் உடனிருப்பு உண்டு நாம் அதை உணர்ந்து வாழ உதவும் நினைவிடமே கோயில் என்பது மறுக்கப்படுகின்றது.

இதனால் சுற்றி இருக்கும் குடிசைகள் பற்றி கவலை கொள்ளாது இறை நம்பிக்கையாளர்களும், மதத்தலைவர்களும் கோடி கோடியாகச் செலவிட்டு பிரமிக்க வைக்கும் கோயில்களையும் கோபுரங்களையும், கொடி மரங்களையும் கட்டுவதில் பெரு முனைப்புடன் இருக்கின்றனர். பசியால் வாடும் குழந்தைகள் அல்லது வேலைக்குச் செல்லும் சிறார்கள் பற்றி சிந்தியாது தெய்வ அல்லது மாதா திரு உருவங்களுக்கு தங்க நகைகள், வைர நகைகள், பட்டாடைகள் அணிவிப்பதிலேயே பலர் ஆர்வமாக இருக்கின்றனர். இன்றைய சமூக, பொருளாதார, அரசியல் செயல்பாடுகளால் பாதிக்கப்படும் மக்கள் மீது அக்கறையின்றி திருவிழாக்களையும், வழிபாடுகளையும், ஆடம்பர அலங்காரங்களுடன் தங்கள் ஆன்மீகக் கடமைகள் முடிந்து விட்டன எனச் செயல்படும் சமயவாதிகளும் உண்டு. ஏனைய ஊர்களுடன் போட்டியிட்டுக் கொள்ளும் தன்மை, சாதி வேறுபாடு என பல ஊர்களில் நாம் காணும் நடைமுறை பல கோயில்களிலும், திருத்தலங்களிலும் ஆன்மீகத்தை வளர்ப்பதை விட வருவாயை பெருக்குவதிலேயே அதிக அக்கறையும் முயற்சியும் எடுக்கப்படுகின்றது.

இத்தகைய தவறான நடைமுறைகளைக் களைய கோயில் பற்றிய புரிதல் நம் மக்களிடையே பரவலாக்கப்படல் வேண்டும். எனவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத விழாக்கொண்டாட்டங்களில் கலந்து கொண்டு, விழாக்களின் மையக் கருத்துக்களை, நோக்கங்களை அறிந்து சாதி, சமயச் சண்டைகளை தவிர்த்து சமத்துவம் பேணி சகோதரர்களாய் வாழ்ந்து, சமய நல்லிணக்கம் காத்து மாற்று சமயக் கருத்துக்களை மதித்து, மனித நேயம் காத்து மனிதப் பண்புகளோடு வாழ்ந்து உயர்ந்த மனிதர்களாவோம்; மதம் கடந்த மனிதம் படைப்போம்.


**உசாத்துணை நூல்கள்:**

புத்துலகம் படைக்கவே – சாதே. செல்வராசு

தோழன் இதழ் - 2004 ஆடி


தோழன் இதழ் - 2008 ஆனி

தோழன் இதழ் - 2012 ஆனி



**திருமதி வி. எடின்சன்**

**யா/வேலணை சரஸ்வதி வித்தியாலயம்**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளமையின் இரகசியம்

**கேள்வி 1:** நான் எப்போதும் கோபப்படுகின்றேன். வீட்டுக் கோபம் அலுவலக நேரத்திலும் கூடவே வருகின்றது. கோபத்தை எவ்வாறு கட்டுப்படுத்துவது?

மனோஜ், கோபத்தை கட்டுப்படுத்தும் போது பக்க விளைவுகள் உண்டு. ஆரோக்கியமான வழிமுறைகளை மேற்கொள்வது சிறந்தது, உணர்ச்சி யோக முத்திரை செய்தல். கோபத்திற்கான மூல காரணத்தை இனங்காணுதல். இரசனை மிகு இடங்களுக்கு செல்லுதல், மெல்லிசைகளை கேட்டல், மனதுக்கு பிடித்தவருடன் உரையாடுதல் அல்லது கோபத்தை ஏற்படுத்தும் சூழலில் இருந்து வேறு இடத்திற்கு செல்வதால் கோபத்தை நெறிப்படுத்த முடியும். அதிகமான கோபமாக இருந்தால் உளவளத்துணையை நாடுவது சிறந்தது. **(மனோஜ், பதுளை)**

**கேள்வி 2:** இப்பொழுது எனக்கு வயது 21. சிறிய வயதிலே திருமணமாகிவிட்டது. மண வாழ்க்கை வெறுத்தது போல உணர்கின்றேன். இப்பொழுது நான் என்ன செய்வது?

அபிராமி, வாழ்கின்ற வாழ்க்கையை இரசித்து வாழும்போதே அதற்கு அர்த்தம் கிடைக்கும். உங்களுக்கு வெறுப்பினை ஏற்படுத்தும் விடயங்களை நினைத்து பாருங்கள். எப்பிடி மகிழ்ச்சியாக வாழ வேண்டுமோ அதை அகக் காட்சி செய்யுங்கள். அதனை மாற்றும் உத்திகள் உள்ளனவா என பாருங்கள். இத்தனை வருட திருமண வாழ்வில் மகிழ்வை ஏற்படுத்திய தருணங்களை நினைவு கூறுங்கள். வாழ்க்கை துணைவரிடம் உங்கள் எதிர்பார்ப்புக்களை மனம்விட்டு தெரியப்படுத்துங்கள். மகிழ்ச்சி யோக முத்திரை செய்தால் மனம் அமைதியாகும். **(அபிராமி, யாழ்ப்பாணம்)**

**கேள்வி 3:** நான் படிக்கும் போது தவறான எண்ணங்கள் வருகின்றது. நன்றாக படிக்க என்ன செய்ய வேண்டும்?

அஸ்வின், சிந்தனை என்பது நாம் நிர்வகிப்பது. எனவே அலைபாயும் உங்கள் சிந்தனையை தூண்டுகின்ற உங்கள் நடத்தையை கண்டறிந்து அதனை மாற்றுங்கள். அர்த்த ஞான யோக முத்திரை செய்தல், மனதுக்கு இதமான பாடல்கள், தியானம், சுவாச பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


என்பவற்றை மேற்கொள்ளுங்கள். அமைதியான, இயற்கையான இடத்தில் ஓய்வெடுங்கள். சிறந்த புத்தகங்களை வாசியுங்கள் மனம் அலைபாய்வதை நிறுத்திக்கொள்ளும். **(அஸ்வின், யாழ்)**

**கேள்வி 4:** என் குடும்ப கஸ்ரம் காரணமாக படிப்பை இடையிலே நிறுத்தி விட்டடேன். படிக்க ஆர்வமிருந்தும் வறுமை துரத்துகின்றது. என்ன செய்வது?

பிரியங்கா, படிப்பதற்கு வயதெல்லை கிடையாது. இப்போதும் உங்களால் படிக்க இயலும். உங்களுக்கு பிடித்த ஆர்வமுள்ள துறையை தெரிவு செய்யுங்கள். அதில் அதிக ஈடுபாடு காட்டுங்கள். வாழ்க்கை விரக்தியானதாக தெரியாது. ஏட்டுக் கல்வியை விடவும் அனுபவக் கல்வி சிறந்தது. கற்றலுக்கு அதிக வாய்ப்புக்கள் காணப்படுகின்றது. அதில் உங்களுக்கு பொருத்தமானதை தெரிவு செய்து விட்டதை தொடருங்கள். வெற்றி உங்களுக்கானது. ஆதி யோக முத்திரை செய்தால் குழப்பம் தெளிவாகும். **(பிரியங்கா, மட்டக்களப்பு)**

**உங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

"நான்"
உளவியல் சஞ்சிகை
'வசந்தகம்' சுவாமியார் வீதி
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்
Whatsapp - 071 871 3039





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மறைந்து போன மனித மாண்பு

உலகில் வாழும் சகல உயிருக்கும் உயிரோட்டமாக இருந்து இயக்கிக்கொண்டிருப்பது மனித மாண்பு ஆகும். மனித நேயம் அல்லது மனித மாண்பு கொண்டோர் உலகில் இன்னும் இருப்பதால்தான் இவ்வுலகம் அழிந்துபோகாமல் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மனித நேயம் இல்லா மனிதர்களை மனிதர்கள் என்றே குறிப்பிட முடியாது மிருகங்களுக்கு ஒப்பானவர்களாக குறிப்பிட வேண்டும். உண்மையில் மிருகங்கள் எனவும் குறிப்பிடுவது தவறுதான். காரணம் பல நேரங்களில் மிருகங்கள் தம் இனத்திற்காக போராடி மனித நேயம் இருப்பதனை மெய்ப்பிக்கும் காட்சிகளையும் கண்ணால் கண்டிருக்கின்றோம். இந்நிலையில் மனிதனின் அரக்கத்தனமான செயல்களுக்காக அவனை மிருகத்துடனும் ஒப்பிட முடியாது. மனித மாண்பற்ற மனிதனை என்னவென்றுதான் குறிப்பிடுவது என்பதும் கேள்விக்குறியாகவே உள்ளது. "மனித மாண்பு என்பது என்ன?" தன்னைபோல் சமமாக பிறரை கருதி, இரக்கம், கருணை கொண்டவனாக, அனைவரையும் அன்புடனும், மதிப்புடனும் நோக்கும் உயர் எண்ணம்தான் மனித மாண்பாக குறிப்பிடப்படுகின்றது. அதனால்தான் அன்னை தெரேசா, அப்துல் கலாம், காந்தியடிகளை மனிதநேயம் உள்ள மாமனிதர்களாக கொண்டாடிக் கொண்டிருக்கின்றோம்.

தமிழ் வரலாறுகள் மனித மாண்பு குறித்த காலத்தால் அழியாத செய்யுள்களை குறிப்பிட்டு வந்துள்ளன. குறிப்பாக மயிலுக்கு போர்வை அளித்தான் போகன், முல்லைக்கு தேர் ஈந்தான் பாரி, புறாவிற்காக தன் உடலையே தானம் செய்தான் சிபி சக்கரவர்த்தி என புகழ்பெற்ற இலக்கிய நிகழ்வுகள் மனித மாண்பை படம்பிடித்து காட்டுகின்றன. ஆனால் இன்று மனிதநேயம் என்பது மனிதர்களிடத்தில் அருகி உள்ளதுடன் தேடுபொருளாக மாறிவிட்டது. காலவோட்டம் மனிதனை குறுகிய மனப்பான்மைக் கொண்ட சுயநலவாதிகளாக மாற்றிவிட்டது. தன் உறவுகளையே பிரித்து பார்க்கும் மனிதரிடத்தில் பொதுநலத்தை எதிர்பார்ப்பது முட்டாள்தனம் தான். மதம், சாதி, இனம், மொழி பிரச்சினைகள், நாடுகளுக்கு இடையிலான பிரச்சினைகள், அதிகார போட்டி, பொருளாதார போட்டி மனிதர் தம் மனிதநேயத்தை தொலைப்பதற்கு காரணமாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக ஊடகங்கள் மக்களிடம் இருந்த மனிதநேயத்தை கொன்றுவருகின்றது என்று குறிப்பிட வேண்டும். தகவல் தொழில்நுட்ப வளர்ச்சி மனிதனிடத்தில் காணப்பட்ட நல்ல குணங்களை பறித்துவிட்டது. தேடி தேடி சென்று வாழ்த்து அட்டைகளை வழங்கி அன்பை பகிர்ந்து கொண்ட காலம்மாறி தன் சொந்த வீட்டில் இருப்பவர்களுக்கே சமூக வலைத்தளங்களில் வாழ்த்துக்களை பறிமாறிக்கொள்கிறோம். வீட்டில் உள்ளவர்களின் பிரச்சினைகளை கேட்கவும், அவர்களுடன் உரையாடவும் நேரம் அற்றவர்களாக இயந்திர வாழ்க்கை வாழ்ந்துக்கொண்டிருக்கின்றோம். இன்றைய காலத்தில் உலகளாவிய ரீதியில் நோக்குமிடத்து போசாக்கின்மை, இயற்கை அனர்த்தம், யுத்தம், தொற்றுநோய் பரவல், வறுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் மக்களின் நிலையை வலுவாக மாற்றிவிட்டது. ஆனால் இதற்காக இரக்கம் காட்டாவிடினும் அதனை ஒரு பிரச்சாராமாக மாற்றாமல் இருக்கலாம். ஆனால் உண்மையில் என்ன செய்கின்றோம் பாதிக்கப்பட்டவரை நாடி உதவிகள் செய்கின்றோம். ஆனால் அவை வெறும் பெயருக்காகவும், புகழுக்காகவும், விளம்பரத்திற்காகவும். இதில் மனித மாண்பு என்பது எங்கு உள்ளது?

ஆபத்தில் இருப்பவனுக்கு உதவும் மனப்பான்மை இன்றைய காலத்தில் ஒரு சிலரிடம் மட்டுமே காணப்படுகின்றது. விபத்து, துஸ்பிரயோகம், கொலை, கொள்ளை இடம்பெறும் இடத்தில் இருந்தாலும் அதனை வலைத்தளங்களில் பதிவேற்ற எடுக்கும் முயற்சியில் சிறிதளவேனும் பாதிக்கப்பட்டவரை காப்பாற்றுவதற்கு மேற்கொள்வதில்லை. விபத்துக்களில் சிக்குண்டு உயிருக்கு போராடும் நபர்களை புகைப்படம் எடுத்து வலைத்தளங்களில் பதிவேற்றும் கேவலமான மனித வர்க்கமாக மாறிவிட்டது இன்றைய மனித மாண்பு. ஒரு பிள்ளை துஸ்பிரயோகப்படுத்தப்பட்டால் அதனை வெவ்வேறு கோணங்களில் கருத்தேற்றம் செய்து அசிங்கப்படுத்தும் மக்கள் கூட்டம். இறந்த நபர்களை விட்டு வாழும் நபர்களையும் நோகடிக்கும் குலமாக காணப்படுவது மனித மாண்பு அழிவடைகின்றமைக்கு சிறந்த எடுத்துக்காட்டாகும். கண்ணுக்கு முன்னால் நடக்கும் அநீதிகளை கண்டும் காணாமல் போவதுதான் இன்றைய மனிதநேயம்.

பச்சிளங்குழந்தை முதல் வயதான மூதாட்டி வரையிலும் இரக்கமின்றி தம் இச்சைக்காக பலியாக்கும் மனித கூட்டத்தில் வாழ்வதென்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் கொடூரமாக உள்ளது. திரைப்படங்களில் சித்தரித்து காட்டப்படுவதாக காண்பிக்கப்படும் காட்சிகள் இன்று நம் கண் முன்னே இடம்பெற்றுக்கொண்டிருக்கின்றது. பெண் பிள்ளைகளை வெளியில் விடுவதற்கே பெற்றோர் பயந்து வாழ்கின்றனர். மனித உயிருக்கு எவ்வித பெறுமதியும் இருப்பதில்லை. தினமும் கொலை, மிரட்டரல்கள் என செய்திகள் பரவிக்கொண்டே இருக்கின்றது. மகன் தந்தையை கொலை செய்துவிட்டான், மகள் தாயை சுத்தியலால் அடித்துவிட்டாள், பெற்ற தாயை நாய் கூட்டில் அடைத்த பிள்ளைகள் என்பன பெரும் துயரத்தை ஏற்படுத்தும் செய்திகளாகிவிட்டது. இன்று முதியோர் இல்லங்களில், அனாதை ஆச்சிரமங்களில் மற்றும் மனநல வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. பொன், பொருளுக்குள் மயக்கமுற்று காணப்படும் மனிதரிடத்தில் மதிப்பு அல்லது மரியாதையை எதிர்பார்ப்பதும் முட்டாள்தனம்தான். பெற்றோரையே புறந்தள்ளும் மனிதர் கூட்டத்தில் மற்றோருக்கு ஆபத்து வரும்போது கருணையை எதிர்பார்க்க இயலாது அந்தளவிற்கு உலகம் மாறிவிட்டது.

சமூகத்தில் இன்று குற்றங்களும், குற்றவாளிகளும் மலிந்துவிட்டனர். காரணம் மனித நேயமின்மையே ஆகும். "உனக்கு நீ எதை செய்ய விரும்பமாட்டாயோ அதை பிறருக்கு நீ செய்யாதே" எனும் விவிலியத் தத்துவத்தை நினைத்துப் பார்த்தாலே உலகில் பல பிரச்சினைகளை தீர்த்துவிடலாம். நான், எனது, எனக்கு என வாழும் சுயநலவாதிகள் இதில் கவனம் கொண்டிருந்தாலும் மனித மாண்பு நிலைபேறாக இருந்திருக்கும் ஆனால் இன்று ஒரு பேசுபொருளாக மாறி இருக்கிறது. மனித நேயமற்ற செயற்பாடுகளை தவிர்ப்பதற்கு என்னதான் சட்ட திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும், அநீதி இழைப்போருக்கு தண்டனை வழங்கப்பட்டாலும், மனதால் ஒருவர் அதனை உணராவிடின் அதில் பயன் ஒன்றும் இல்லை. அருகில் இருக்கும் ஒருவரின் பசியை போக்காமல் ஆச்சிரமங்களுக்கு சென்று உணவளிப்பதால் எவ்வித பயனையும் ஒருவர் பெறப்போவதில்லை. உண்மையான அன்பு அல்லது உதவி என்பது பெயர், புகழ் என்பவற்றை தாண்டி ஏனையோர் அறியாமல் செய்வதுதான் அவ்வாறு செய்வதற்கு எத்தனை நபர்கள் விரும்பம் கொண்டுள்ளனர் என்பதும் கேள்விக்குறியே.

இன்றைய காலத்தில் தகாத உறவுகள், பாலியல் பலாத்காரம், திருட்டு என்பன ஊடகங்களின் வழியாக மனிதரிடத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபல்யமாகிவிட்டதுடன் அதனால் அவர்களுக்கு சிறிதளவேனும் குற்றவுணர்வு இருப்பதில்லை. உண்மையில் தன் மனசாட்சிக்கு பயப்படும் மனிதன் மனித மாண்பு கொண்டோனாக்வே இருப்பான் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. "எந்தக்குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே..." எனும் வரிகள் பிறப்பால் எவரும் தவறானவர்கள் அல்ல அவர்கள் வாழும் சமூகம் மற்றும் சூழல் ஒருவரை தவறானவராக சித்தரித்துவிடுகின்றது. இன்று ஒருவரை மாண்பற்றவர்களாக வளர்த்தெடுப்பதில் ஊடகங்களின் பங்கு அதிகளவில் உள்ளது. ஊடகங்கள் தவறானவை அல்ல அதனால் ஏற்படும் நன்மைகளும் பல ஆனால் மனிதர்கள் அதனை பயன்படுத்தும் வழிமுறைகள்தான் தவறாக உள்ளது.

நவீன தொழில்நுட்ப யுகத்தில் வாழ்ந்துக்கொண்டு எல்லாவற்றையும் சிந்திக்கும் நாம் மனித மாண்பின் அடிப்படையை உணர தவறுகின்றோம். அதனால் தான் இன்று இத்தனை பிரச்சினைகள். சரியான முறையில் மனித மாண்பை முன்னெடுக்கும்போது இத்தகைய பிரச்சினைகளுக்கு எப்போதோ தீர்வுகளை பெற்றிருக்கலாம். உலகில் ஏதோ ஒரு மூலையில் உள்ளவரின் மனதை புரிந்து கொள்ள முயலும் நபர்கள் அடுத்த வீட்டில் இருப்பவரின் மனதை புரிந்துகொண்டால் போதும். தன் உயிரை மாய்த்துக்கொள்ளவே தனக்கு அதிகாரம் இல்லா மனிதர்கள், பிறரின் உயிரை துச்சமென ஏண்ணி மாய்ப்பதற்கு அவர்களுக்கு உரிமையை யார் தொடுத்தது என்பதை உணரவேண்டும். மனித மாண்பு எனும் விடயத்தினால் தான் மனிதர்களை மிருகத்திடமிருந்து பிரித்து பார்க்கின்றனர். ஆனால் உண்மையில் விலங்குகளிடம் காணப்படும் இத்தகைய குணம் இன்று மனிதர்களிடத்தில் மறைந்து போவதென்பது கவலைக்குரியதாகும். இதனை உணர்ந்து செயற்படும் மனிதர்களை தேடி செல்ல வேண்டிய நிலையில் இருக்கின்றோம். எனவே மனிதர்கள் மனிதர்களாக வாழ்வதற்கு மனித மாண்புடன் இருப்பதன் அவசியத்தை ஒவ்வொருவரும் உணர்ந்து செயற்படுவது எம் கடமை என்பதை நினைவில் கொள்வோம்.

**உசாத்துணை நூல்கள்:**

மனித நேயம் மலரட்டும், தினத்தந்தி, பெருமாள்.நா, (2020.02.22).
மனித உயிர்கள் மதிப்பு மிக்கவை, தினமணி, வீரையன்.மு, (2014.07.03).
மனிதத்தின் மேன்மை மனிதநேயம், தினத்தந்தி, பிறையா அஸ்வத்.இரா, (2019.09.09)

**எலியாஸ் ஜெனோவா** (B.A. Hons)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித மாண்பு மாண்புற வேண்டும்

(ஓர் இஸ்லாமியப் பார்வை)

இறைவனின் படைப்பினங்களில் மனித படைப்பானது சிறப்பானது. இந்தச் சிறப்பை நாம் போற்றிப் புகழ்ந்து வாழ்ந்து வளம் பெற வேண்டும். இந்த விதத்திலே எம்மில் எத்தனை நபர்கள் இதை மனதில் நிலை நிறுத்தி வாழ்கின்றோம் என்பது சிந்திக்க வேண்டிய ஒரு விடயமாகிவிட்டது. காரணம் யாதெனில் எங்கு பார்த்தாலும் மனித நேயம் மழுங்கடிக்கப்பட்ட நிலைமையும், மார்க்க விழுமியங்களும், காணாமல் போன கவலைகளும், ஒற்றுமை ஓரங்கட்டப்படும் அறிவீனங்களுமே, மனித வாழக்கையை சீரழித்து சின்னாபின்னமாக்கிக் கொண்டிருக்கின்றன.

இஸ்லாமிய ஆன்மீகத்தில் இதற்கான அடிப்படை காரணம் என்னவென்று நோக்குமிடத்து முஹம்மது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய கூற்றான "மனித உடலிலே ஓர் தசைத் துண்டு உண்டு. அது ஆரோக்கியமாக இருந்தால் மனித வாழ்வே நன்றாக இருக்கும். அந்த தசைத் துண்டு கெட்டுவிட்டால் அனைத்துமே கெட்டுவிடும்." அது தான் 'மனித இதயம்' என **ஹதீஸை** நாம் ஆதாரமாக கொள்ளலாம். ஆம், இதயமானது ஒழுக்கங்களைப் பேணிக் காப்பாற்றி, பழக்கவழக்கங்களை பண்போடும், பாசத்தோடும், பரவவிட்டு பார் போற்ற வாழவும், அதில் முனைப்போடும் முன்னெச்சரிக்கையோடும் வாழ்வதுமே வாழ்வின் நியதி.

இவ்வாறு வாழும் வேளை நல்வாழ்வு நம்மை வந்து சேரும். இன்றைய உலகு பயமென்ற காரிருளாலும் அவநம்பிக்கை என்ற கருமேகத்தாலும் சூழப்பட்டு திரும்பும் பக்கமெல்லாம் பெற்றோரை மதிக்காத பிள்ளைகளும், தாம் பெற்றெடுத்த பிள்ளைகளுடன் ஒரு சிறு நேரம் கூட ஒதுக்க முடியாத பெற்றோர்களும் என, இப்படித்தான் வாழ வேண்டும் என்ற தத்துவத்தை தளர்த்தி எப்படியும் வாழலாம் என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

இதன் விளைவு ஹெரோயின், கஞ்சா, குடு, சிகரட், மதுபானங்கள் என்கின்ற அபாயகரமான ஔடதங்களை தங்கள் உடன் பிறப்புக்களாக தக்க வைத்துள்ளனர் இன்றைய தலைமுறையினர். போதையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதையில் நடந்த எவருமே திரும்பி வருவதில்லை என்பதே வாழ்வின் நியதியாகிவிட்ட இவ் வேளையில் நிர்க்கதியாக்கப்பட்ட குடும்பங்கள் ஏராளம். கல்வியை மட்டுமன்றி கர்ப்பையும் பறிகொடுத்து மனநோயால் பாதிக்கப்பட்ட இளைஞர்கள், யுவதிகள் இன்று நடைபிணங்களான உண்மை கதைகளும் தாராளமாகிவிட்டது.

இதனால் தான் நமது பிள்ளைகளின் உடல்நலம் கெட்டு உயிர்கள் பறிபோய்க்கொண்டிருக்கின்றது என்பது மருத்துவர்களது வாழ்வியல் கூற்று. இதை ஒழித்து எதிர்கால சந்ததியை உருவாக்க அனைத்து நாடுகளும் ஒன்றித்து குரல் கொடுக்க வேண்டும். இந்த போதைப் பழக்கம் பயங்கரவாதத்தில் ஈடுபட வைக்கவும் தயங்காது என உலக சுகாதார அமர்வு கூறி நிற்கின்றது (World Health Forum, Vol 5, No 1984). இந்த நிலையை நாம் எதிர்நோக்க நேரிட்டால் அவர்களை அன்போடு அணுகி, அவர்களுக்குரிய பிரச்சினையை உற்று நோக்கி, களைந்து அதற்கான பரிகார உதவிகளை வழங்குவதே மனித மாண்பதன் மகத்துவமாகும்.

எம் இதயமானது நன்றாயிருப்பின் பிறர் குறை தேடலை தவிர்க்கலாம். குடும்பங்களில் சந்தேகங்கள் சங்கமமாவதை தவிர்க்கலாம். பொய், களவு, பொறாமை என்பன எம் உள்ளத்தை நிறைக்க இடம் கொடுக்க கூடாது. துருவித் துருவி ஆராயும் மனம் இறுதியில் குறை காணும். அதை எப்படி பகிரங்கமாக்கலாம் என்ற தீவிர சிந்தனையிலிருந்து விடுதலை பெறுவது மிக மிக முக்கியம். அயல் வீட்டாரை அண்டி வாழும் நாம் அவர் எந்த நாட்டினரானாலும், எந்த மதமாக இருந்தாலும், எந்த மொழி பேசினாலும், எத் தொழில் செய்தாலும், எந்த இனமாயினும், அவர் யாராக இருப்பினும், அவருடன் சிரித்து முகங்காட்டி சுமுகமான நல்லுறவுடன் பழகுவதே மனித மாண்பு. மனித மாண்பு அனைத்து கொள்கைகளையும் கடந்து செல்ல வேண்டும். மனித மாண்பு மாண்புற வேண்டின் இன, மத, மொழி கடந்த மனிதம் படைப்போம்.

**நசீரா அப்துல் அஸீஸ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்மண்ட் பிராய்ட்

சிக்மண்ட் பிராய்ட் எனும் உளவியலாளர் ஒரு ஆஸ்திரிய நரம்பியல் நிபுணர் மற்றும் உளப்பகுப்பாய்வின் நிறுவுனரும், நவீன உளவியலின் தந்தையும் ஆவார். இவர் மனித ஆளுமையைப் புரிந்து கொள்ள முற்றிலும் புதிய அணுகுமுறையை உருவாக்கினார். 20ஆம் நூற்றாண்டின் மிகவும் செல்வாக்கு மிக்க மனித மனங்கள் பற்றிய இவரது கருத்துக்கள் இன்றுவரை முக்கியத்துவம் வாய்ந்தாகக் காணப்படுகிறது.

சிக்மண்ட் பிராய்ட் கி.பி. 1856 மே மாதம் 6 ஆம் திகதியன்று மொராவியாவின் ப்ரீபெர்க்கில் பிறந்தார். (தற்போது செக் குடியரசில் பிரைபர்) இவரது தந்தை ஒரு வியாபாரி. ஆரம்பத்தில் லீப்சிக்கிலும் பின்னர் வியன்னாவிலும் குடியேறி தன் கல்வியைத் தொடர்ந்தார். கி.பி. 1873 இல் வியன்னா பல்கலைக்கழகத்தில் மருத்துவம் படிக்கத் தொடங்கி பட்டம் பெற்ற பின்பு வியன்னா பொது மருத்துவமனையில் பணிபுரிந்தார். கி.பி. 1885 இல் நரம்பியல் நிபுணர் ஜீன் சார்கோட் என்பவரது மாணவராக பாரிஸிற்குச் சென்றார். பின்பு வியன்னாவிற்குத் திரும்பியதும் நரம்பு மற்றும் மூளை கோளாறுகளில் நிபுணத்துவம் பெறும் பயிற்சியில் ஈடுபட்டார். அதே ஆண்டில் மார்த்தா பெர்னே என்பவரை திருமணம் புரிந்தார். அவருக்கு ஆறு குழந்தைகள் இருந்தனர்.

கி.பி. 1897 இல் இவர் தன்னைப் பற்றிய ஒரு தீவிரமான பகுப்பாய்வை தொடங்கினார். கி.பி. 1900 ஆம் ஆண்டில் அவரது முக்கியமான படைப்பாகிய "கனவுகளின் விளக்கம்" எனும் நூல் வெளியிடப்பட்டது. அதில் பிராய்ட் கனவுகளை நனவில் அல்லது ஆழ்மன விருப்புக்கள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்தார். கி.பி. 1902 இல் இவர் வியன்னா பல்கலைக்கழகத்தில் நரம்பியல் நோயியல் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். கி.பி.1938 வரை இவர் அதே பதவியில் இருந்தார். மருத்துவக் கழகம், இவரது கருத்துக்களை ஏற்போரது குழு, மற்றும் இவரது மாணவர்களது குழு பிராய்டின் கருத்துக்களை வரவேற்கத் தொடங்கின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கி.பி. 1923இல் "The Ego and the Id" எனும் நூலை வெளியிட்டார். இது மனதின் புதிய கட்டமைப்பு மாதிரியை பரிந்துரைத்தது. இது Id Ego மற்றும் Super Ego என பிரிக்கப்பட்டது. கி.பி. 1933இல் நாஜிக்கள் இவரது புத்தகங்களை பகிரங்கமாக எரித்தனர். கி.பி. 1938 இல் இவர் தனது மனைவி மற்றும் மகளுடன் வியன்னாவை விட்டு லண்டனுக்குச் சென்றார். கி.பி. 1923 இல் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட இவர் 30 க்கும் மேற்பட்ட அறுவை சிகிச்சைகளுக்கு உட்படுத்தப்பட்டு 23 செப்டம்பர் 1939 அன்று புற்றுநோயால் இறந்தார். இன்று பிராய்ட் உயிருடன் இல்லை என்றாலும் நனவுநிலை மட்டங்களாகிய, நனவு நிலை, முன்நனவு நிலை, நனவிலி நிலை குறித்தும் ஆளுமையின் கூறுகளாகிய Id, Ego, Super Ego குறித்தும் உளப் பாதுகாப்புப் பொறிமுறைகள் மற்றும் உளப்பாலியல் பருவங்கள் குறித்தும் உளப் பகுப்புவாதச் சிந்தனா கூடம் எனும் மனித ஆளுமை விருத்தி பற்றி இவர் முன்வைத்த கருத்துக்கள் யாவும் இன்றுவரை உளவியற் பரப்புக்களில் உயிர்ப்புடன் இருப்பது பெருமைக்குரிய விடயமாகும்.

"இயக்காற்றல் உளவியலின் தந்தை" என ஏனைய உளவியலாளர்களும், உளவியல் கற்கையைத் தொடரும் மாணவர்களும் அடையாளம் கண்டு சிறப்பாக நோக்குமளவிற்கு, உளவியற் பரப்பினிலே சிக்மண்ட் பிராய்டின் பங்களிப்பு இன்றியமையாதது என்றால் அது மிகையாகது. இவ்வாறு உளவியற் துறையில் முதன்மைப்படுத்தி நோக்கும் சிறந்த உளவியலாளராக பிராய்ட் விளங்குகின்றார்.

**சு. கிருந்திகா**
**இரண்டாம் வருடம்**
**உளவியல் துறை**
**யாழ். பல்கலைக்கழகம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை வாழ்வு

அந்நிய தேசத்து மண் மேலே
அகதியாய் வாழ்ந்தவர் நாமன்றோ!
இலங்கை என்ற தீவினிலே
இந்திய வம்சம் நாமன்றோ!

கடக்க முடியா கல்மேடுகளில்
நடந்து வந்ததும் நாமன்றோ
தடுக்கி விழும் போது கூட
இந்தியன் என்பார் இகழ்ந்திடவே!

திரையில் உள்ள இந்தியரை
நாயகனாக்கும் எம் மக்கள்
தேயிலைத் தோட்டத்தில் உள்ளவரை
வெறும் நாய் என்று கணிப்பார் எம்மவர்.

உடைகின்றது எலும்புகள்
நாட்டின் முதுகெலும்பை நிறுத்திட!
லீச்சினால் வடியும் எம் ரத்தம்
தேயிலைச் சாயமாய் குடிக்கும் கோப்பையிலே!

கொட்டும் மழையும் கொழுத்தும் வெயிலும்,
அண்ணார்ந்து பார்த்து நிலவு காணும்,
நிமிர்ந்து நடக்க சரிந்து படுக்க வீடில்லை
மேடு சரியின் மண் வீடும் இடியும்.

உழைத்து உழைத்து எம்மை தொலைத்தோம்
நம்பி நம்பி எம்மை இழந்தோம்
கால் வயிறு நிரப்பி நிரப்பி பசி மறந்தோம்
மார்பு தாங்கும் பிள்ளைகளை
எம் முதுகு தாங்கும் நிலையறிந்தோம்!

நான் இந்தியனா? இலங்கையனா?
நான் தமிழனா? சிங்களவனா?
இப்படியிருப்பதால் நான் மனிதனா???

அ.அருண்ராஜ், அ.ம.தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்வாழ்விற்கு ஒரு நூல்




"அதிசயங்களை நிகழ்த்தும் அதிகாலை." இவை யாவும் நிஜம். நீங்கள் கற்பனை செய்து வைத்திருக்கும் வாழ்க்கையை விரைவாக அடைய இதோ ஓர் எளிய வழி! காலையில் நீங்கள் வழக்கமாக எழுந்திருப்பதைவிட ஒரு மணிநேரம் முன்னதாக எழுந்து, பத்துநிமிடங்களுக்கு ஒரு நடவடிக்கை என்ற கணக்கில் வெறும் ஆறு நடவடிக்கைகளை மட்டும் மேற்கொள்ளுவதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் உங்களால் அதிசயங்களை நிகழ்த்த முடியும் என்று யாராவது சொன்னால் நீங்கள் நம்புவீர்களா?

ஆனால் அது முற்றிலும் உண்மை. இந்நூலின் ஆசிரியர் ஹால் எல்ராடின் வாழ்க்கையே அதற்குச் சாட்சி. சாவின் விளிம்புவரை அவரை அழைத்துச் சென்ற ஒரு கோர விபத்து அவருடைய உடலையும் மூளையையும் பாதித்ததோடு மட்டுமல்லாமல் மனதளவிலும் அவரைப் படுகுழியில் தள்ளியது. இந்நூலில் நீங்கள் கற்றுக் கொள்ளவிருக்கும் அதே உத்திகளைப் பயன்படுத்தி அவர் தன்னுடைய மோசமான நிலையிலிருந்து மீண்டதோடு மட்டுமல்லாமல், குறுகிய காலத்திற்குள் சர்வதேசப் புகழ் பெற்ற ஒரு நூலாசிரியராகவும், ஓர் ஆலோசனையாளராகவும், ஒரு வெற்றிகரமான தொழிலதிபராகவும் உயர்ந்துள்ளார். அந்த உத்திகளை இவ்வுலகிலுள்ள பிறருடன் பகிர்ந்து கொள்ளுவதற்காகவே அவர் இந்நூலை எழுதியுள்ளார்.

**இவ் ஆண்டின் அடுத்த இதழ்களுக்கான மையப்பொருள்**

- **பாலியற் கல்வி**
- **போதைவஸ்து**
- **பொதுத்தலைப்பு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'நான்' அடுத்த இதழ்

### 'பாலியற் கல்வி'

உளவியல் சார்ந்த கவிதை, கதை, கட்டுரைகள் மற்றும் ஆய்வுக்கட்டுரைகளை வைகாசி மாதம் 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வையுங்கள்.
(முடிந்தவரை மின்னஞ்சலூடாக அனுப்பிவையுங்கள்)

- தனிப் பிரதி : 100/=
- தபால் மூலம் : 125/=

ஆண்டுச் சந்தா
- உள்ளூரில் : 400/=
- வெளியூரில் : 15 Euro

**உங்களுடைய சந்தாப்பணத்தை தபால் மூலமாகவோ, அல்லது கீழ்வரும் வங்கிக்கணக்கிற்கோ அனுப்பி வைக்கவும்**

Name : Naan Psychology Magazine
A/C No. : 8600926146
Bank : Commercial Bank

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"Naan"
Psychological Magazine
"Vasnthgam" Swamiyar Road,
Colomputhurai, Jaffna.
Sri Lanka.
Tel: 021-222 -5359
Email: naanvasanthaham@gmail.com

[redacted]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org